இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 96 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 29 – புதன்கிழமை 15 நவம்பர் 2023 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 96: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 29 - Wednesday 15 November 2023 - Trichy ★★10 Pages ₹5.00

## முதல்வரின் மகளிர் இலவசப் பேருந்துப் பயணத் திட்டம்!

# பெருமளவு பணம் மிச்சம்!

## கருத்துக் கேட்பில் பெண்கள் தகவல்!

**சென்னை, நவ.15-**

**தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு மகளிருக்கு இலவச பேருந்துப் பயணம் என்ற புரட்சிகரமான திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியது. முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த இந்த முன்னோடி திட்டத்தை வட மாநிலங்களிலும் செயல்படுத்த தொடங்கி இருக்கிறார்கள். இந்தத் திட்டம் தமிழகம் முழுவதும் பெண்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பு பெற்றுள்ளது.**

இந்த நிலையில், 'என்ன நினைக்கிறார்கள் சென்னை பெண்கள்' என சென்னை மாநகராட்சி ஒரு ஆய்வை நடத்தி இருக்கிறது. சென்னை முழுவதும் 3 ஆயிரம் பேரிடம் இந்த கருத்துக் கேட்பு நடத்தப்பட்டுள்ளது. இதில் 2,432 பேர் பெண்கள், 568 பேர் ஆண்கள். இதுதவிர நூறு திருநங்கைகளும் கருத்து தெரிவித்துள்ளனர்.



### பெண்களுக்கு உதவும் ரோந்து வாகனம்!

இவர்களிடம் நடத்திய கருத்துக் கணிப்பில் 89 சதவீத பெண்கள் போக்குவரத்துக்கு அரசு பேருந்தை மட்டுமே நம்பி இருக்கிறார்கள் என்பது தெரிந்தது. இதில் 82 சதவீதம் பேர் அரசு வழங்கியிருக்கும் இலவச பேருந்து பயணத்தின் மூலம் பெருமளவு பணம் மிச்சப்படுவதாக மகிழ்ச்சி தெரிவித்து உள்ளனர்.

பஸ் பயணத்தின்போது பாலியல் தொந்தரவுக்கு உள்ளானவர்களில் 62 சதவீதம் பேர் துணிச்சலாக தட்டி கேட்டதாகவும் ஆனால் பொதுமக்கள் தரப்பில் ஒருவர் கூட உதவிக்கு முன்வரவில்லை என்றும் ஆதங்கப்பட்டனர்.

ஆனால் இது பற்றி மாநகராட்சி அதிகாரிகள் கூறும்போது, பெண்களுக்கான பாதுகாப்பு வசதிகள் என்னென்ன இருக்கிறது என்பது பற்றி 62% பெண்களுக்கு எதுவுமே தெரியவில்லை. 32 சதவீதம் பெண்களுக்கு மட்டுமே காவலன் செயலியை பற்றிய புரிதல் இருக்கிறது. 10 சதவீதம் பேர் பெண்களுக்கு உதவுவதற்கான பெண்கள் போலீஸ் ரோந்து வாகனத்தை பற்றி அறிந்திருக்கிறார்கள்.

29 சதவீத பெண்கள் மாநகர பஸ்களில் அவசர உதவிக்கு வைக்கப்பட்டிருக்கும் பொத்தான் பற்றி தெரிந்து வைத்துள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வு அறிக்கையை வெளியிட்டு மேயர் பிரியா கூறும்போது, "பஸ் பயணம் செய்யும் பெண்கள் என்னென்ன பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். உங்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று அறிந்து கொள்வதற்காகவே இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதன் மூலம் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் மாநகரப் போக்குவரத்து கழகத்திற்கு பரிந்துரைகள் செய்யப்படும், அடிக்கடி பஸ்களை இயக்க வேண்டும்.




பெண்களுக்காகவே பஸ்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவசரகால பொத்தான் பற்றிய விழிப்புணர்வை பெண் பயணிகளிடம் ஏற்படுத்த வேண்டும். மேலும் 10 சதவீத பெண்கள் இதே போல் பாலியல் ரீதியான தொந்தரவுகள் பஸ்களில் மட்டுமல்ல மெட்ரோ ரெயிலில் கூட நடப்பதாக தெரிவித்து உள்ளார்கள்" என்றார்.

### நாட்டிலேயே பாதுகாப்பான நகரம் சென்னை!

சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் கூறும்போது, "நாட்டிலேயே பாதுகாப்பான நகரம் சென்னை என்பது பல்வேறு ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. அதேபோல் தமிழகத்தில் தான் அதிகமான பெண் போலீஸ் நிலையங்களும் உள்ளன.

இந்த போலீஸ் நிலையங்கள் மூலம் பெண்களுக்கு பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்து உள்ளது.

கவுன்சிலிங்கும் கொடுக்கப்படுகிறது. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத பகுதி என்று தெரியவரும் இடங்களில் கூடுதலான ரோந்து பணிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன" என்றார்.

## உலக மக்கள் தொகை 800 கோடியை தாண்டியது!

### மக்களின் சராசரி வயதும் 32 ஆக அதிகரிப்பு!

*வாஷிங்டன், நவ. 15-*

*உலக மக்கள் தொகை 800 கோடியை தாண்டி விட்டதாக அமெரிக்காவின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 2000வது ஆண்டில் உலக மக்கள் தொகை 600 கோடியாக இருந்த நிலையில், 23 ஆண்டுகளில் 200 கோடி அதிகரித்துள்ளது. மக்களின் சராசரி வயது தற்போது 32 ஆக உள்ளதாகவும் இவை 2060ம் ஆண்டில் 39 வயதாகவும் உயரும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. கடந்த 1960வது ஆண்டில் இருந்து 2000ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 2 மடங்காக இருந்த நிலையில், தற்போது அவை குறைந்துள்ளது.*

*பெண்கள் கருவுறும் விகிதம் தொடர்ச்சியாக குறைந்து வருவதே இதற்கு காரணம் என கணக்கெடுப்பு மையம் கூறியுள்ளது. உலகிலேயே மக்கள் தொகை அதிகம் உள்ள நகரங்களின் பட்டியலில் ஜப்பான்நாட்டின்டோக்கியோ முதல் இடம் பிடித்துள்ளது. டோக்கியோவின் மக்கள் தொகை 3,71,94,105 ஆக உள்ளது. பட்டியலில் டெல்லி 3,29,41,309 மக்கள் தொகையுடன் 2ம் இடத்திலும் சீனாவின் ஷாங்காய் 2,92,10,808 3ம் இடத்திலும் உள்ளது. 2,12,96,517 பேருடன் மும்பை 9வது இடத்திலும் 1,53,32,793 பேருடன் கொல்கத்தா 17வது இடத்திலும் 1,36,07,800 பெங்களூரு 23வது இடத்திலும் 1,17,76,147 சென்னை 26வது இடத்திலும் உள்ளன.*

## ஒரு லட்சம் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு!

### தைவான் அரசு முடிவு!

தைபே, நவ. 15 –

ஒரு லட்சம் இந்தியர்களை வேலைக்கு அமர்த்த தைவான் அரசு முடிவு செய்துள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

டிசம்பர் மாத தொடக்கத்தில் தொழிற்சாலைகள், பண்ணைகள், மருத்துவம் உட்பட பல்வேறு துறைகளில் குறைந்த பட்சம் 1 லட்சம் இந்திய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த தைவான் அரசு திட்டமிட்டுள்ளதாக ப்ளூம்பெர்க் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வரும் டிசம்பர் மாதத்தில் இந்தியா – தைவான் இடையே ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாக இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, தைவான் இடையிலான வேலை வாய்ப்பு ஒப்பந்தம், அதன் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தையில் இருப்பதாக வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் அறிந்தம் பாக்ஷியும் உறுதிப்படுத்தி உள்ளதாக கூறப்படுகிறது.

### இந்தியா முழுவதும்

## மக்களாட்சி சகாப்தத்தை தொடங்குவதற்கான நேரம் இது!

### ராகுல் காந்தி வீடியோ பதிவு வெளியீடு!

*புதுடெல்லி, நவ. 15-*

*நாடு முழுவதும் மீண்டும் மக்களை மையமாகக் கொண்ட ஆட்சியின் சகாப்தத்தை தொடங்கும் நேரம் இது' என காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது வீடியோ பதிவில் கூறி உள்ளார். தெலங்கானாவில் சட்டப்பேரவை நடைபெற உள்ள நிலையில், கடந்த 2020ம் ஆண்டு கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்ட விவசாயி ஒருவரின் வீட்டிற்கு ராகுல் காந்தி சமீபத்தில் சென்றிருந்தார். அந்த வீடியோவை தனது யூடியூப் பக்கத்தில் வெளியிட்டு ராகுல் காந்தி கூறியிருப்பதாவது:*



*'மிக முக்கியமாக ஒலிக்க வேண்டிய குரல், வரிசையின் கடைசியில் இருக்கிறது' என மகாத்மா காந்தி கூறி உள்ளார். கும்மரி சந்திரய்யாவின் குரலும் அப்படிப்பட்டது.*

*இவர் தெலங்கானாவை சேர்ந்த சிறு விவசாயி. அன்றாட வாழ்க்கைக்கே போராடிய அவர், கடன் சுமையால் தற்கொலை செய்து கொண்டார். தனது அன்பான குடும்பத்தை விட்டுச் சென்று விட்டார். இவரை காப்பாற்றுவதில் பிஆர்எஸ் அரசு தோல்வி அடைந்து விட்டது. சரியான நேரத்தில் அரசு உதவியிருந்தால், கும்மரி சந்திரய்யா இன்று உயிருடன் இருந்திருப்பார். ஆனால், சர்வாதிகார எண்ணம் கொண்ட பி.ஆர்.எஸ், பா.ஜ. போன்ற கட்சிகளால் மக்களின் தேவைகளை வழங்க இயலாது. இந்த விஷயத்தில் காங்கிரசால் நிச்சயம் மாற்றத்தை கொண்டு வர முடியும். வரிசையில் கடைசியாக நிற்கும் கோடிக்கணக்கான குரல்களின் ஆசைகள் தேவைகளின் வெளிப்பாடுதான் காங்கிரசின் தேர்தல் உத்தரவாதங்கள்.*

*கும்மரி திருப்பத்தமா இன்னமும் தனது குடும்பம் கடன் சுமையால் போராடுவதாக கூறினார். இந்த நிலை மிக விரைவில் மாறும். மக்களை மையமாக கொண்ட காங்கிரஸ் அரசு மகாலட்சுமி திட்டத்தின் கீழ் பெண்களுக்கு மாதம் ரூ.2,500 நிதி உதவி, இலவச பஸ் பயணம், ரூ.500க்கு காஸ் சிலிண்டர் வழங்கும். விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.15,000, விவசாய தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ரூ.12,000 வழங்கும். நமது அனைத்து தரப்பு மக்களுக்கும் நியாயத்தை உறுதி செய்வதே எங்களின் இப்போதைய யுத்தம். இந்தியா முழுவதும் மீண்டும் மக்களை மையமாக கொண்ட ஆட்சியின் சகாப்தத்தை தொடங்கும் நேரம் இது. இவ்வாறு ராகுல் காந்தி கூறி உள்ளார்.*

## வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் - தேதி மாற்றம்!

### தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பு!

*சென்னை, நவ.15-*

*இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, 01.01.2024ஐ தகுதியேற் படுத்தும் நாளாகக்கொண்டு புகைப் படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 27.10.2023 முதல் 05.01.2024 வரை மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது.*

*சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தின், ஒரு பகுதியாக வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சேர்ப்பதற்கும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கும் வசதியாக இந்தியத் தேர்தல் ஆணையத்தால், 04.11.2023, 05.11.2023, 18.11.2023 மற்றும் 19.11.2023 (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் வாக்குச்சாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் அறிவிக்கப்பட்டன. ஏற்கனவே, இது தொடர்பான சிறப்பு முகாம்கள் 04.11.2023 மற்றும் 05.11.2023 ஆகிய தேதிகளில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*இதற்கிடையில், தமிழக அரசால், 18.11.2023 அன்று பணிநாளாக அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து, இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்பு முகாம் தேதிகளை 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை)-க்கு பதிலாக, 25.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளாக மாற்றியமைத்துள்ளது என்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.*

### தீபாவளியையொட்டி

# சென்னையில் கடந்தாண்டைக் காட்டிலும் இந்தாண்டு காற்று மாசு குறைவு!


## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தகவல்!

*சென்னை, நவ.15-*

*தீபாவளியின் போது சென்னையில் கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டு காற்று மாசு குறைந்திருப்பதாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தகவல் தெரிவித்துள்ளது.*

*பெருநகர சென்னை மாநகரத்தின் காற்றின் தரம் மற்றும் ஒலி அளவு ஆய்வு பற்றிய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில், இந்திய உச்சநீதிமன்றம், ஆணையின் படி ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள்/ மாசு கட்டுப்பாடு குழுமங்கள் முக்கியமான நகரங்களில் குறுகிய கால கண்காணிப்பாக அதாவது 15 நாட்களுக்கு (அதாவது தீபாவளிக்கு 7 நாட்களுக்கு முன்பாகவும், தீபாவளி அன்றும், தீபாவளிக்கு 7 நாட்களுக்கு பின்பாகவும்) முக்கிய காற்று மாசு காரணிகளின் அளவுகளை கண்காணிக்க மாநிலங்களை அறிவுறுத்தியுள்ளது.*

*இந்திய உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் (2023) தீபாவளி பண்டிகை அன்று காலை 06.00 முதல் 07.00 மணி வரையிலும், இரவு 07.00 முதல் 08.00 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும் என அறிவித்தது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தீபாவளி பண்டிகையின் போது பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் சுற்றுப்புற காற்றின் மாசு தர அளவையும் மற்றும் ஒலி மாசு அளவையும் கண்டறிய பெருநகர சென்னை மாநகரத்தில் பெசன்ட் நகர், தியாகராய நகர், நுங்கம்பாக்கம், திருவல்லிக்கேணி, சௌக்கார்பேட்டை, வளசரவாக்கம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய ஏழு இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*



*உச்சநீதிமன்ற ஆணையின் அடிப்படையில் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டு வரைமுறைகளின் படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 15 நாட்களுக்கு (அதாவது தீபாவளிக்கு 7 நாட்களுக்கு முன்பாகவும், தீபாவளி அன்றும், தீபாவளிக்கு 7 நாட்களுக்கு பின்பாகவும்) காற்று மாசு காரணிகளின் அளவுகளை கண்காணித்து வருகிறது. மேலும் ஒலி மாசுபாட்டின் அளவு தீபாவளிக்கு முன் நவம்பர் 06 (மாலை 6 மணிமுதல் இரவு 12 மணி வரை) மற்றும் தீபாவளி பண்டிகையன்று நவம்பர் 12 (மாலை 6 மணிமுதல் இரவு 12 மணி வரை) ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெருநகர சென்னை மாநகரத்தின் கடந்த 3 ஆண்டுகளின் காற்றின் தரம் மற்றும் ஒலி அளவு ஆய்வு பற்றிய அறிக்கை அட்டவணை 1 மற்றும் 2ல் இணைக்கப்பட்டுள்ளது.*

*அட்டவணை 1 : சுற்றுப்புற காற்றுத்தர ஆய்வறிக்கை மற்றும் காற்றுத்தர குறியீடு*

*அட்டவணை 2: ஒலி மாசு பாட்டு அளவின் ஆய்வறிக்கை*

*தீபாவளி பண்டிகைக்கு முன் அதாவது நவம்பர் 06 அன்று (மாலை 6 மணிமுதல் இரவு 12 மணி வரை) குறைந்த அளவாக ஒலி மாசு திருவொற்றியூரில் 52.3 dB(A)ம், அதிக அளவாக ஒலி மாசு நுங்கம்பாக்கத்தில் 64.7 dB(A)ம் ஆக கண்டறியப்பட்டது. மேலும் தீபாவளி அன்று (அதாவது 12.11.2023) குறைந்த அளவாக ஒலி மாசு தியாகராயநகரில் 60.5 dB(A)ம், அதிகபட்ச அளவாக ஒலி மாசு வளசரவாக்கத்தில் 83.6 dB(A)ம் கண்டறியப்பட்டது.*

*ஆகையால் தீபாவளி அன்று கண்டறியப்பட்ட ஒலி மாசு அளவுகள், வரையறுக்கப்பட்ட தேசிய சுற்றுப்புற ஒலிமாசுபாட்டின் அளவுகளை விட அதிக அளவாக உள்ளது என கண்டறியப் பட்டது. (பகல் நேரங்களில் 65.0 dB(A), இரவு நேரங்களில் 55.0 dB(A) அளவு நிர்ணயிக்கப்பட்டது). தீபாவளி நாளான நவம்பர் 12 அன்று, காற்றுத்தர குறியீட்டு அளவு (AQI) காலை 6.00 மணி முதல் மறுநாள் 13.11.2023 காலை 6.00 மணி வரை, மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி 207லிருந்து 365 வரை (மிக மோசமான அளவுகள்) என கண்டறியப்பட்டது. குறைந்த அளவாக பெசன்ட் நகரிலும் (207 AQI) அதிக அளவாக வளசரவாக்கத்திலும் (365 AQI) கண்டறியப் பட்டது.*

*இதற்கு முக்கிய காரணிகளாக, பொதுமக்கள் பெறுமளவில் பட்டாசுகள் மற்றும் வாண வெடிகளை வெடித்ததினாலும், மேலும் காற்றில் காணப்பட்ட அதிகமான ஈரத்தன்மையும் மற்றும் காற்றின் மிகக் குறைந்த வேகமும் ஆகும். மேற்கூறிய வானிலை காரணிகளும், பட்டாசு வெடிப்பதனால் ஏற்படும் புகை வான்வெளியில் விரவுவதற்கு ஏதுவான சூழ்நிலை அமையவில்லை.*

*தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணைந்து மாவட்ட ஆட்சியாளர்கள், மாநகராட்சி ஆணையாளர்கள், காவல்துறை, பள்ளி, கல்லூரி மாணவர்கள், செய்தி மற்றும் ஊடகங்கள் மேற்கொண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலமாக பட்டாசு வெடிப்பதனால் ஏற்படும் தாக்கத்தை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*இதன் அடிப்படையில் சென்ற ஆண்டு தீபாவளி (2022) காற்று தர மாசின் அளவை விட நடப்பாண்டு தீபாவளி (2023) காற்றின் தர மாசின் அளவு 40 விழுக்காடுகள் (AQI) குறைந்துள்ளது என்பது மேற்கண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 15-11-2023

# ஆளுநர்கள் தலையில் இடி - 1

ஆளுநர்கள் தலையில் இடியை இறக்கி இருக்கிறது உச்சநீதிமன்றம். ஆளுநர்களை வைத்து நரித்தந்திர நாடகங்களை நடத்தி வரும் பா.ஜ.க. அரசுக்கும் சேர்த்துத்தான் இது இடியாக அமைந்திருக்கிறது.

**அரசியல் சாசனம் வழங்கியுள்ள அதிகாரத்தை ஆளுநர் ஆர்.என்.ரவி தவறாக பயன்படுத்தி வருவதாக உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு குற்றஞ்சாட்டியது. அரசின் மசோதாக்கள் மற்றும் தீர்மானங்களுக்கு உரிய நேரத்தில் ஒப்புதல் கொடுக்காமல் ஆளுநர் கிடப்பில் போடுவதால் அரசுப் பணிகள் முடங்குவதாகவும் வாதிடப்பட்டது. சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட 12 மசோதாக்கள், 4 நடவடிக்கை உத்தரவுகள், 54 கைதிகளின் முன்கூட்டி விடுதலை தொடர்பான கோப்புகள் உள்ளிட்டவை ஆளுநர் ஆர்.என்.ரவியால் முடக்கப்பட்டிருப்பதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு இத்தகைய வழக்கை தொடர்ந்தது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, இறுதியாக உச்சநீதி மன்றத்தின் கதவைத் தட்டி இருக்கிறது தமிழ்நாடு அரசு.**

ஆளுநராக ஆர்.என்.ரவி வந்தது முதல் கொடுத்து வரும் குடைச்சல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர் பொதுவெளியில் சனாதனக் காவலராகவும், வர்ணாசிரம வழிகாட்டியாகவும், தத்துவார்த்த மேதையாகவும் தன்னைக் காட்டிக் கொள்ளச் செய்து கொள்ளும் உளறல்கள் ஒதுக்கித் தள்ளத்தக்கவை. இவை காலம் காலமாக சமூகநீதிக்கு எதிரான வகுப்புவாத சக்திகளால் நாம் கேட்டு வரும் பரப்புரைகள்தான். இதுவரைச் சொல்லிச் சொல்லி தோற்ற கருத்துகளை, கடைசியாகக் கிடைத்திருக்கும் கிண்டிவாலா வாயில் போட்டுச் சொல்லச் சொல்லி பத்திரிகைகளில் வர வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். சொல்லித் தொலைப்பவர் கவர்னர் என்பதால், நாமும் பதில் சொல்லித் தொலைக்க வேண்டி இருக்கிறது. இது போல நிர்வாக விவகாரங்களில் இருக்க முடியாது அல்லவா?

அரசாங்கத்தின் சார்பில் எழுதிக் கொடுத்த உரையைத்தான் ஆளுநர் என்பவர் அவையில் வாசிக்க வேண்டும். ஆனால் அந்த உரையையே திருத்தி வாசித்தார் ஆளுநர் ரவி. சொன்னதைச் சொல்லாமலும், சொல்லாததை சேர்த்தும் சபையின் மாண்பைக் குலைக்கும் உரையை வாசித்தார் ஆளுநர் ரவி. உடனடியாக, அதே இடத்திலேயே, தீர்மானத்தைக் கொண்டுவந்து - அவர் வாசித்த உரையை நிராகரித்து - அரசால் வழங்கப்பட்ட உரையே அவைக் குறிப்பில் இடம் பெறும் என்று சொல்லி - சபையின் மாண்பைக் காட்டினார் முதலமைச்சர் அவர்கள்.

**“சமூகநீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், பல்லுயிர் ஓம்புதல் ஆகிய கொள்கைகள் இவ்வரசின் அடித்தளமாக அமைந்துள்ளன. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி, பார்போற்றும் திராவிட மாடல் ஆட்சியை இந்த அரசு வழங்கி வருகின்றது” என்பதையே விட்டுவிட்டு படித்தார் ஆளுநர். அதனால்தான் அவரது உரையை அந்த இடத்திலேயே நிராகரிக்கும் தீர்மானத்தை முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள்.**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் உருவாக்கி நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதாக்களுக்கு ஏன் அனுமதி தரவில்லை என்பதற்கு ஆணவமாக பதில் சொன்னார் ஆளுநர் ரவி. ‘கிடப்பில் இருந்தாலே நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். நீண்ட நாட்களாக கிடப்பில் வைக்கப்பட்டுள்ள மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். வார்த்தை அலங்காரத்துக்காக அதனை நிறுத்தி வைப்பு என்கிறோம்’ என்று பொதுவெளியில் பேசினார் ஆளுநர் ரவி. பதவிப் பிரமாணம், ரகசியக் காப்புப் பிரமாணங்களுக்கான அர்த்தம் தெரியாதவரிடம் யார் சொல்லி புரிய வைப்பது?

அதனால்தான் உச்சநீதிமன்றம் போனது தமிழ்நாடு அரசு.

மாநில பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கும் மசோதா, தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது தொடர்பான மசோதா, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக துணை வேந்தரை தமிழ்நாடு அரசே நியமிக்க அதிகாரம் அளிக்கும் மசோதா உள்ளிட்டவற்றை ஆளுநர் ஆர்.என்.ரவி கிடப்பில் போட்டுள்ளார்.

ஏதோ மகா யோக்கியரைப் போல வேடம் போட்டு வரும் இந்த ஆளுநர்தான், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா மீதான குட்கா ஊழல் வழக்கில் நீதிமன்ற விசாரணையை தொடங்க சி.பி.ஐ. கோரிய அனுமதிக்கான கோப்புகளிலும் கையெழுத்திடாமல் உள்ளார். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கே.சி.வீரமணி, எம்.ஆர். விஜயபாஸ்கர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கிட ஊழல் தடுப்பு, கண்காணிப்பு இயக்குநரகம் இசைவு ஆணை கோரிய கோப்பிலும் ஆளுநர் கையெழுத்திடாமல் உள்ளார். இவை அனைத்துமே சட்டமீறல்கள் ஆகும். சட்டசபை மாண்புமீறல்கள் ஆகும். அவரது பதவிக்கான அதிகார மீறல்கள் ஆகும்.

**‘அரசின் கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவது சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும்’ என்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தி இருந்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக செயல்படுவதன் மூலம், தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை ஆளுநர் ஆர்.என்.ரவி பறித்து வருவதாகவும் குற்றம்சாட்டப்பட்டது.**

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநருக்கு காலக்கெடு விதிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு உச்சநீதி மன்றத்தில் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணை நடைபெற்று வருகிறது.

**- தொடரும்**



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மைத்துனரும், கழக மூத்த முன்னோடியுமான கோயில் திருமாளம் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களின் 101-வது பிறந்த தினத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. மற்றும் தாட்கோ தலைவர் - முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தொ.மு.ச. மு.சண்முகம் எம்.பி., ஒரத்தநாடு தேர்தல் பார்வையாளர் அக்ரி கே.பி.டி.கணேசன், இல.மேகநாதன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், ஊராட்சி மன்றத் தலைவர் சோனியா பாலமுத்து உள்ளிட்ட நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்று கோ.தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

### புலவர் இந்திரகுமாரி தலைமையில் - வி.பி.கலைராஜன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# கழக இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - டி.கே.எஸ்.இளங்கோவன் - த.வேலு சிறப்புரை!

சென்னை, நவ. 15- தி.மு.க. தலைமை இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர்கள் சிறப்பு கலந்தாய்வுக் கூட்டம் 9.11.2023 மாலை 3.30 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகம், அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் நந்தனம் ச.நம்பிராஜன் வரவேற்புரையாற்றினார்.

புலவர் இந்திரகுமாரி கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

மு.தென்னவன், தஞ்சை கூத்தரசன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், செந்தலை கவுதமன், நா.செந்தில், ஈரோடு இறைவன், வி.வெங்கடாசலம், பேராசிரியர் சேவுக பெருமாள், பெருநாழி போஸ், நேரு பாண்டியன், பிரம்மபுரம் பழனி, கே.எஸ்.நாதன், தசரதன், ஆர்.எம்.டி.ரவிந்திரன், கோவை திராவிடமணி, ஆடுதுறை உத்திராபதி, ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக செய்தித் தொடர்பு பிரிவு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மாவட்டச் செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர்.

இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் நா.சந்திரபாபு நன்றி கூறினார்.

பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கழக இலக்கிய அணிச் செயலாளர் வி.பி. கலைராஜன் செய்திருந்தார்.

### குன்னம் சி.இராஜேந்திரன் முன்னிலை!

# பெரம்பலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. - க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், நவ.15- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்கலைஞர்மகளிர்உரிமைத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளுக்கு ரூ.1000 வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர்க.கற்பகம்தலைமையில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக கல்லூரி கூட்ட அரங்கில் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பணம் எடுக்கும் அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில்,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன், க.சொ.க. கண்ணன், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாவட்டகாவல்கண்காணிப்பாளர்ச.சியாமளாதேவிஆகியோர்முன்னிலைவகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: -

“மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” என்றார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள். அவர் இன்று இருந்திருந்தால் “மங்கையராய்தமிழ்நாட்டில் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” என்றே சொல்லியிருப்பார். அந்த அளவிற்கு பெண்களின் வாழ்வாதாரத்தைமேம்படுத்திட தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

அதனடிப்படையில், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ,1000 உரிமைத் தொகை வழங்கிடும் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை” முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அதனை வெற்றிகரமாகசெயல்படுத்தி வருகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில்மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, வருவாய் கோட்டாட்சியர்(பொ)சத்தியபாலகங்காதரன், தனலட்சுமிசீனிவாசன்கல்விநிறுவனங்களின் செயலர்நீல்ராஜ், நகர்மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள் மீனா அண்ணாத்துரை (பெரம்பலூர்), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் முத்தமிழ்ச்செல்வி மதியழகன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத்குமார், பேரூராட்சி தலைவர்கள் ஏ.எஸ்.ஜாகீர்உசேன் (லெப்பைக்குடிக்காடு), சங்கீதா ரமேஷ் (குரும்பலூர்), பாக்கியலட்சுமிசெங்குட்டுவன் (பூலாம்பாடி), வள்ளியம்மை ரவிச்சந்திரன் (அரும்பாவூர்), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், டாக்டர் அ.கருணாநிதி, மகாதேவி ஜெயபால், நகர்மன்றத்துணைத்தலைவர் து.ஹரிபாஸ்கர், அனைத்து முதல்நிலை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இந்திய தொழிற்சாலைகளில்

# பெண் ஊழியர்களை அதிகம் கொண்ட முதல் மாநிலம் தமிழ்நாடு!

### ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் சிறப்புக் கட்டுரை!

சென்னை, நவ.15 - இந்தியாவில் தொழிற்சாலைகளில் பெண் ஊழியர்களை அதிகம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதைப் பாராட்டி ‘திஇந்து’நாளிதழ் சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டின் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்புவசதிகளே இதற்கு காரணம் என்று ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் பாராட்டியுள்ளது.

*Wherewomenelevateshopfloors* என்ற தலைப்பில் ‘தி இந்து’ நாளிதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில், இந்தியாவில் உற்பத்தித் துறையில் பணிபுரியும் பெண்களில் 43 சதவீதம் பேர்தமிழ்நாட்டில்உள்ளதாகவும், மின்சார வாகனங்கள், பேட்டரி, மின்னணுப் பொருட்கள், சூரிய சக்தி மின்தகடுகள் உற்பத்தி மற்றும் பாரம்பரிய தோல், ஜவுளி, ஆட்டோமொபைல் துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பெண்களை அதிக அளவில் பணியமர்த்தி உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றியத் தொழிலாளர் அமைச்சகம் வெளியிட்ட 201920ம் ஆண்டுக்கான தொழிற்துறை புள்ளி விவரங்களின்படி, இந்திய அளவில் தொழிற்சாலைகளில் 15 லட்சத்து 80 ஆயிரம் பெண்கள்வேலைசெய்வதாகவும்,இவர்களில்6லட்சத்து 79 ஆயிரம் பேர் தமிழ்நாட்டில்உள்ள தொழிற்சாலைகளில்வேலைசெய்வதாகவும், இந்திய அளவில் மொத்தமுள்ளபெண்தொழிலாளர்களில் இது 43 சதவீதம் என்றும் தேசிய சராசரியை விட இது அதிகம் என்றும் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

பெண்களின்தைரியமும், அவர்களுக்குகுடும்பத்தினர் அளித்து வரும் ஆதரவும், அதிக அளவில் பெண்கள் வேலைக்கு செல்ல காரணமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ள ‘திஇந்து’நாளிதழ், தமிழ்நாட்டில்உள்ளஆலைகளில், பெண்களுக்குதேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பான சூழல் உள்ளது இதற்கு முக்கியக் காரணம் என்றும், டைட்டன்நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு இணைந்து தொடங்கியதொழிற்சாலையில், பெண் தொழிலாளர்களைதேர்வுசெய்து, பயிற்சி அளிப்பது போன்ற முன்மாதிரித்திட்டங்கள்நல்லபயன் அளித்துள்ளதாகவும், இவ்வாறு வேலை வாய்ப்பு பெற்ற பெண்களின் பிள்ளைகள் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உயர் கல்வி கற்று தற்போது நல்ல நிலையில் உள்ளதாகவும் சுட்டிக் காட்டி உள்ளது.

இதேபோல், ஓலா பியூச்சர்தொழிற்சாலையில்3ஆயிரம் பெண்கள் பணிபுரிவதாகவும், அவர்களில் பெரும்பாலானோர் பொறியியல் டிப்ளமோ மற்றும் அறிவியல் பட்டம் பெற்றவர்கள், அவர்கள் அனைவரும் 22 24 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றும் The Hindu நாளிதழ் குறிப்பிட்டுள்ளது. ஒசூரில் உள்ள அசோக் லேலண்ட் தொழிற்சாலையில்முற்றிலும்பெண்களால் இயக்கப்படும் தனிப்பிரிவு செயல்பட்டு வருவதையும் ‘தி இந்து’ நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

டாடாஎலக்ட்ரானிக்ஸ், டாடா பவர், ஏதர், பாரத் நியூ எனர்ஜி, க்ரீவ்ஸ் எலக்ட்ரிக் மொபிலிட்டி, மற்றும் ஐபோன்களை உற்பத்தி செய்யும் ஃபாக்ஸ்கான் மற்றும்பெகாட்ரான்நிறுவனங்களும் பெண்களை அதிக அளவில் வேலைக்கு அமர்த்தியுள்ளதையும் இக்கட்டுரை சுட்டிக்காட்டி உள்ளது. சென்னை உள்ளிட்ட நகரங்களில் உள்ள உட்கட்டமைப்புகள், பாதுகாப்பானபோக்குவரத்துமற்றும் விடுதிகள், உயர்கல்விக்கான வசதிகள்மற்றும்தொழிற்சாலைகளில் உள்ள அடிப்படைவசதிகள்மற்றும்பாலியல் தொல்லைகளை தடுப்பதற்கானஏற்பாடுகள் பெண்களின்வேலைவாய்ப்புக்கான மையமாக தமிழ்நாட்டை மாற்றி உள்ளதாகவும், இதன் காரணமாக கிராமங்களில்இருந்துநகரங்களை நோக்கி வரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகவும் ‘திஇந்து’ ஆங்கில நாளிதழ் பாராட்டியுள்ளது.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! பரிதி இளம் சுருதி தலைமை!

# கழக அயலக அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா - புகழரங்கம்!

### மூத்த பத்திரிகையாளர் கி.வைத்தியநாதன் - நீதியரசர் கண்ணதாசன் - சிற்பி பால சுப்பிரமணியன் - புலவர் இ.ரெ.சண்முக வடிவேல் - நல்லி குப்புசாமி புகழுரை!

சென்னை, நவ.15- கழக அயலக அணி சார்பில், சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தொகுதி - வடக்கு பகுதியில் கலைஞர் 100 - 59வது நிகழ்ச்சியாக “புகழில் கலைஞர் முதலிடம், புதுமை அவரிடம் புகலிடம்” என்ற தலைப்பில் மாபெரும் புகழரங்கம் இன்று (15.11.2023-புதன்கிழமை) மாலை 6 மணிக்கு, கேரள சாமஜ் ஆடிட்டோரியம், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் பரிதி இளம் சுருதி தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.சி., எம்.எம். அப்துல்லா எம்.பி., சொ. வேலு, கே.எஸ்.எம்.நாதன், கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், வி.சுதாகர், கோ.மணி, க.நந்தீஸ்வரன், அ.நிர்மலா தேவி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், புரசைஜி.தாமோதரன், எம்.சுந்தர்ராஜன், க. வினோத், ஆர்.டி.சங்கர் நானா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.எஸ்.சித்திக், ஆர். மகேஷ், முத்து இப்ராகிம் ஷா, சி.அஜித், அ.ரகிபுல்ல என்கிற ஹகுர், க.பிரகதீஸ்வரர், எம்.விஜயகுமார், சையத் நியமத்துல்லா, எம்.வீரேந்தர் நந்தா, யாசர் சர்தார் மீரான், லோ.சுகுமாரன், எஸ்.எல்.நாராயணன், சுந்தர் ராஜன், விஜய் அமர்நாத், ஆ.பிரகாஷ், வி. மகேஷ்பாபு, பா.பிரகாஷ் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இப்புகழரங்கில் தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன், சட்ட வல்லுநர் - நீதியரசர் கண்ணதாசன், புகழ்பெற்ற கல்வியாளர் - சிற்பி பாலசுப்பிரமணியன், பட்டிமன்ற பேச்சாளர் புலவர் இ.ரெ.சண்முக வடிவேல், தொழிலதிபர் நல்லி குப்புசாமி உள்ளிட்டோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் மேயர் பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ. , இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

99 ‘அ’ வட்டக் கழகச் செயலாளர் சி.சேகர் நன்றி கூறுகிறார்.

## பட்டாசு புகை எதிரொலி:

# உலகின் மிகவும் மாசுபட்ட 10 நகரங்களில் ஒன்றானது டெல்லி !

### மேலும் 2 இந்திய நகரங்களும் இடம்பிடித்தன!

புதுடெல்லி, நவ.15-

தீபாவளிக்கு பட்டாசு வெடித்ததால் காற்றில் புகை மூட்டம் அதிகமானதால் உலகின் மிகவும் மாசுபட்ட 10 நகரங்களின் பட்டியலில் டெல்லி இடம் பெற்றுள்ளது. மேலும் இரண்டு இந்திய நகரங்களும் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளன.

தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தில் பட்டாசுக்கு தனி இடம் உண்டு. பட்டாசு வெடிக்கப்படுவதால் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுவது போல இந்த ஆண்டும் தேசியத் தலைநகர் காற்று மாசு அளவில் முதலிடம் பிடித்தது. ஸ்விஸ் குழுவின் காற்று தரக்குறியீட்டு அளவின்படி, டெல்லியில் காற்றின் தரக் குறியீடு 420 ஆக, ஆபத்தானது என்ற நிலையில் இருந்தது. ஆனால் இந்த முறை டெல்லியுடன், முதல் 10 இடங்களில் கொல்கத்தாவும், மும்பையும் இணைந்துள்ளன. கொல்கத்தா 196 என்ற காற்று தரக்குறியீட்டுடன் 4வது இடத்திலும், இந்தியாவின் வர்த்தக நகரமான மும்பை 163 என்ற காற்று தரக்குறியீட்டுடன் 8வது இடத்திலும் இருக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை இரவு முதலே டெல்லியில் அடர்த்தியான புகை மண்டலம் உண்டாகி காற்றின் தரம் 680 என்ற மிகவும் ஆபத்தான நிலை என்பதைக் கடந்தது. ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி கொண்டாட்டத்தின் போது டெல்லியில் பட்டாசு வெடிக்க தடை விதித்தாலும் அந்த தடை தீவிரத்துடன் அமல்படுத்தப்படுவதில்லை. இதனால் டெல்லியில் தீபாவளிக்கு மறுநாள் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்து வருகிறது.

இந்தியாவில் ஒவ்வொரு குளிர் காலத்துக்கு முன்பாகவும் காற்றின் தரம் மிகவும் மோசமடைகிறது. குளிர்ந்த காற்று, வாகனங்களின் புகை, தொழிற்சாலைகள், கட்டுமானப் பணி தூசு மற்றும் வேளாண்மை கழிவுகளை எரித்தல் போன்ற காரணிகளால் காற்று மாசு அடைகிறது.

இதனிடையே டெல்லியில் கடந்த வாரத்தில் மிகவும் மோசம் என்ற நிலையில் நீடித்து வந்த காற்றின் தரம் வெள்ளிக்கிழமை பெய்த மழையால் சற்றே மேம்பட்டிருந்தது. இதனால் ஒற்றை இரட்டை இலக்க திட்டத்தை அதிகாரிகள் ஒத்திவைத்தனர். தீபாவளிக்கு பிறகான காற்று மாசு அதிகரிப்பால் மீண்டும் அதனை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் திட்டமிட்டு வருகின்றனர்.

காற்றின் தரக் குறியீடு400 500 ஆக இருந்தால், காற்று மிகவும் மோசமடைந்து இருப்பதாக அர்த்தம். இந்த நிலையில் ஆரோக்கியமானவர்களும் பாதிப்படையும் நிலை ஏற்படும். காற்றின் தரம் 0-50 வரையில் இருந்தால், நன்றாக இருப்பதாக அர்த்தம்.

டெல்லியில் நிலவரம்: டெல்லியில் நேற்று முன்தினம் (நவ.13) காலை 7 மணிக்கு காற்றின் தரக்குறீயிடு 275 ஆக மோசம் என்ற நிலையில் இருந்தது. இதனிடையே ஷாதிபூரிலர் 315, அயநகரில் 311, லோதி சாலையில் 308, புசாவில் 355, ஜஹாங்கீர்பூரியில் 333 என மிகவும் மோசம் என்ற நிலையில் காற்றின் தரம் இருந்தது.

## முத்தமிழறிஞர் கலைஞரின் மைத்துனர்

# கோ.தட்சிணாமூர்த்தி 101-ஆவது பிறந்தநாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து!



சென்னை, நவ. 15-

கழகத்தின் மூத்த முன்னோடியும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மைத்துனரும் தனது தாய்மாமாவுமான கோவில் திருமாளம் கோ.தட்சிணா மூர்த்தி அவர்களின் 101-ஆவது பிறந்த நாளையொட்டி, அவரை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்தினார்.

இதுபற்றிய செய்தி வருமாறு:-

**கழகத்தின் மூத்த முன்னோடியும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மைத்துனரும் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தாய்மாமாவுமான தட்சிணாமூர்த்தி அவர்களின் 101ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசி வாயிலாக அவரைத் தொடர்புகொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**

## சிங்கப்பூரிலும் பெரியார்! ஸ்ரீரங்கத்திலும் பெரியார்!

# அரை நூற்றாண்டு கடந்தும் முளைக்கும் விதைகள்!

புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை, விதைக்கப்படுகிறார்கள் என்பது சொல் வழக்கு!

பெரியார் மறைந்து ஐம்பதாண்டுகள், அரை நூற்றாண்டுக்காலம் நிறைவடையப் போகிறது! சென்ற வாரம் செய்திகளில் இரண்டு காரணங்களுக்காக இடம் பெற்றார் பெரியார்.

அது இரண்டுமே அவரது சிந்தனைகள் பலவடிவங்களில் தொடர்ந்து இயக்கம் பெறுவதையே சுட்டிக் காட்டுகின்றன. ஒன்று, அறிவியலாளர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் சிங்கப்பூரில் **“பெரியாரும் அறிவியலும்”** என்று நிகழ்த்திய உரை. மற்றொன்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஸ்ரீரங்கத்தில் இருக்கும் பெரியார் சிலையை அகற்றுவோம் என்று கூறியது.

ஒன்று பெரியார் நினைவை போற்றும் அண்ணாதுரை கூற்று. இன்னொன்று பெரியார் நினைவை அகற்றத் துடிக்கும் அண்ணாமலை கூற்று. இரண்டையும் இணைத்துப் பார்க்கும்போது **பெரியாரின்** சிந்தனைகள் இருபத்தோராம் நூற்றாண்டு தமிழ் சமூகத்தில் தொடர்ந்து இயக்கம் பெறப் போவது உறுதியாகின்றது.

அவர் தூவிய விதைகளெல்லாம் தொடர்ந்து முளைக்கப் போகின்றன. தமிழ்நாடு பகுத்தறிவின் நந்தவனமாகும் சாத்தியம் பிரகாசமாக உள்ளது. இந்த இரு நிகழ்வுகளையும் நாம் அலசிப் பார்த்து புரிந்து கொள்வது அவசியம்.



### சிங்கப்பூரில் பெரியார்

அறிவியலாளர் அண்ணாதுரையின் சிங்கப்பூர் உரை பெரியாரை முற்றிலும் புதிய பரிமாணத்தில் வெளிப்படுத்தியது. அவருடைய குடும்பம் திராவிட இயக்கப் பற்றுள்ளது. அவர் தந்தை மயில்சாமி அவருக்கு பெயர் வைத்ததே அறிஞர் அண்ணாவை மனதில் வைத்துதான். அவர் அதனால் பெரியாரை தன் கல்வித்துறை, அறிவியல் பயணத்திற்கு வழிகாட்டும் கருத்துக்களை வழங்கியவராக தன் உரையில் எடுத்துக் கூறியது சிறப்பாக இருந்தது.

நவீன கால கல்வியின் நோக்கம் என்ன? கீழ்படிதலுக்கு ஏற்ற அறிவுரைகளை மாணவர்களின் மூளையில் ஏற்றுவது அல்ல. தகவல்களை திணித்து, செய்முறைகளை பயிற்றுவித்து அவற்றை பயன்படுத்தி பணி செய்யும் இயந்திரங்களாக உருவாக்குவது அல்ல. மாறாக தனக்கு கிடைக்கும் தரவுகளை வைத்து சிந்திக்கும் ஆற்றல் பெற்றவராக ஒருவரை உருவாக்க வேண்டும் என்பதுதான்.

இந்த நோக்கினைத்தான் ஐரோப்பாவில் ஒளியூட்டுக் காலம் (age of enlightenment) என அழைத்தார்கள். ஜெர்மானிய தத்துவ அறிஞர் இமானுவேல் காண்ட் 1784ஆம் ஆண்டு “What is Enlighternment?” என்ற ஒரு கட்டுரையை எழுதினார். அதில் அவர் மானுடம் தானாக வலிந்து ஏற்படுத்திக் கொண்ட முதிர்ச்சியின்மையிலிருந்து விடுபடுவதே ஒளியூட்டுக் காலம் என்றார்.

பிறர் என்ன கூறுகிறார்கள் என்பதிலிருந்து தன் செயல்பாட்டை வடிவமைத்துக் கொள்ளாமல். தன் சிந்தனையை பயன்படுத்தி சரி, தவறு எது என்பதை பகுத்தாய்வதே முதிர்ச்சி என்றார். அதை அவர் “Aude Sapare!” “அறியத் துணிவாயாக!” என்ற முழக்கமாக முன்வைத்தார்.

**கிட்ட த்தட்ட இந்த கருத்துக்களையே பெரியாரிடமிருந்து அண்ணாதுரை எடுத்துக் கொள்கிறார். “முன்னோர்களின் கூற்றையெல்லாம் விட, உன் அறிவு பெரிது; அதை சிந்தி!” என்கிறார் பெரியார். செக்கு மாடாக இருக்காமல், பந்தயக் குதிரையாக மாறுவதே கல்வி என்று பெரியார் கூறியதை மிக அழகாக பகுத்து, ஆராய்ந்து விளக்கினார் அண்ணாதுரை.**

தனக்குள்ள முக்கிய தகுதி துணிவு என்று பெரியார் கூறியதை ஆராயும் அண்ணாதுரை, ஏற்கனவே பொதுக்கருத்தாக அறிவியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றில் திருப்தியடையாமல், மேலும் அதனை ஆராய்ந்து பார்க்க முற்படுவதற்கு துணிவு வேண்டும் என்பதை விளக்குகிறார். அதனால்தான் நிலவினை பற்றிய கருத்துக்களை முடிந்த முடிவாக கருதாமல் அதில் நீர் இருக்கும் சாத்தியத்தை ஆராயத் துணிந்ததாகக் கூறினார் அண்ணாதுரை.

**இதுபோன்ற சுய அறிதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் கருத்துக்களை எவ்வளவோ தத்துவவாதிகள் சொல்லியிருக்கலாம். சாக்ரடீஸ் சொல்லியிருக்கலாம்; புத்தர் சொல்லியிருக்கலாம்; காண்ட் சொல்லியிருக்கலாம்; நீட்சே சொல்லியிருக்கலாம். ஆனால் தமிழகத்தில் ஒரு கிராமத்தில் பிறந்த பிள்ளைக்கு இந்த கருத்துக்கள் சென்று சேரும் விதத்தில் கூறியவர் பெரியார்.**

பெரியார் உலகில் தோன்றிய எந்த ஒரு தத்துவவாதிக்கும் இணையான சிந்தனை ஆழமும், வாழ்வின், இயற்கையின் நுட்பங்களை மின்னலென வெளிப்படுத்தும் கூர் நோக்கும் கொண்டவர். அண்ணாதுரையின் சிங்கப்பூர் உரையின் சிறப்பு என்னவென்றால் அவர் பெரியாரின் கூற்றுக்களை வெறும் மேற்கோளாகக் கூறாமல், அவற்றின் பொருளை விரிவாக விளக்கி உள்வாங்கும் முறையினை கைக்கொண்டதுதான்.

தமிழ்நாட்டின் எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் பலரும் பெரியாரின் சொற்களை கவனமின்றியே வாசித்து வந்துள்ளார்கள் அல்லது முழுவதும் புறக்கணித்து வந்துள்ளார்கள் என்ற எண்ணம் எனக்கு உண்டு.

ஏனெனில் அவர் சமூகப் போராளியாக எளிய மக்களிடத்தில் பேசியதும், அவர்கள் சுயமரியா தைக்கு அச்சாரமாக பார்ப்பனர்கள் தங்களுக்கு கற்பித்துக்கொண்ட உயர்வுகளை எள்ளி நகையாடி தகர்க்கும் விதத்தில் பேசியதும் காரணமாக இருக்கலாம். அல்லது தேசியம், பார்ப்பனீயம், இறைமுதல்வாதம் ஆகிய புனித மையங்களுக்கு எதிராக தீவிரமாகப் பேசியதாலும் இருக்கலாம்.



மயில்சாமி அண்ணாதுரை போல அவர் வார்த்தைகளை அலசி, ஆராய்ந்து விரிவாகப் பொருள்கொள்ளும் போக்கு வளர்ச்சியடையும் போதுதான் பெரியார் சிந்தனையின் ஆகிருதி மேலும், மேலும் வெளிப்படும்.

**பெரியாரின் தத்துவப் பார்வை தனித்துவமிக்கது என்று நான் நம்புகிறேன். அதனை உறுதி செய்து கொள்ளும்பொருட்டு உலகின் பல்வேறு தத்துவ சிந்தனை மரபுகளை பரிசீலித்து வருகிறேன். பெரியாரின் கூற்றுகளும், செயல்முறையும் அபூர்வமானவை. அவருடையது ஒருவிதமான தத்துவார்த்த செயல்முறையாகும் (philosophical praxis). பொதுப்புத்தியினை வடிவமைக்கும் சொல்லாடல்களை கலைத்துப் போட்டு, முரண்வெளிகளை உருவாக்கி, சிந்தனையை விளவிக்கும் செயல்முறை அது.**



**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*

### ஸ்ரீரங்கத்தில் பெரியார்!

திருவரங்கம் என்று தமிழில் அழைக்கப்படும் தலத்திலுள்ள கோயில் மிகவும் தொன்மையானது. நிச்சயம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அதன் மையக் கட்டுமானம் இருந்து வந்துள்ளது.

சோழர் காலத்தில் அது மேலும் சிறப்புப் பெற்றது. கம்பர் அவருடைய ராமாவதாரம் நூலை அங்கேதான் அரங்கேற்றினார் என்று கூறப்படுகிறது. ராமானுஜர் அந்த கோயிலின் நடைமுறைகளை சீர்செய்து வடிவமைத்தார். பின்னர் நாயக்கர் காலத்தில் அந்த கோயில் மேலும் விரி வடைந்துள்ளது. பல்வேறு சுற்று மண்டபங்களும், கோபுரங்களும் கட்டப்பட்டுள்ளன.

தெற்கிலிருந்து அந்த கோயிலில் நுழையும்போது இருக்கும் மையமான நுழைவாயிலில் ஒரு பிரம்மாண்டமான கோபுரம் கட்ட விஜயநகர ஆட்சியில் பதினாறாம் நூற்றாண்டில் துவங்கினார்கள். பல்வேறு காரணங்களால் அடித்தளமிட்டு வாயில் கட்டப்பட்டவுடன் பணி நின்றுபோய்விட்டது. கோபுரம் இல்லாத அந்த பிரம்மாண்ட வாயில் ஒரு அழகான கற்பனையை தூண்டுவதாக விளங்கியது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதுகளின் இறுதியில் அகோபில மட ஜீயர் தன் கனவில் அந்த கோபுரத்தை கட்டுமாறு அரங்கநாதன் பணித்ததாகக் கூறினார். அதற்கான பரவலான ஆதரவைத் திரட்டினார். இருபதாம் நூற்றாண்டில் பத்து மாடி, இருபது மாடி குடியிருப்புகள் பரவலான பிறகு, விமானப் பயணங்கள் இயல்பான பிறகு, கோபுரங்களுக்கு முன் காலத்தில் இருந்த முக்கியத்துவம் கிடையாது என்றாலும் வலிந்து இந்த பிரம்மாண்ட கோபுரத்தை கட்டவேண்டும் என்று முனைந்தார்.

நானூறு ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட அஸ்திவாரத்தின் மீது கட்டுவது எவ்வளவு பாதுகாப்பானது என்ற கேள்வி எழுந்தது. எல்லா கேள்விகளையும் மத நம்பிக்கை, புனிதவாதம் வென்றது.

அந்த கோபுரம் கட்டும் எண்ணம் உருவாகி, முயற்சியாகி, அது கட்டப்பட்ட காலத்தில் நான் திருவரங்கத்தில்தான் இருந்தேன். எனக்கு அந்த முயற்சியில் சிறிதும் ஒப்புதல் இருக்கவில்லை. இன்றைய காலத்தில் அவ்வளவு பணத்தை கோபுரம் கட்டுவதில் செல்வழிக்க வேண்டுமா என்பது ஒரு கேள்வி.

இரண்டாயிரம் ஆண்டுகளாக இருக்கும் புகழ்மிக்க இந்த கோயிலுக்கு இந்த கோபுரத்தால் என்ன புதிய மகத்துவம் வரப்போகிறது என்ற கேள்வி. மூன்றாவது அழகியல் அடிப்படையில் அந்த கோபுரமற்ற வாயிலின் கம்பீரம் காணாமல் போய்விடுமே என்ற வருத்தம்.

திருவரங்கத்தில் பிறந்தவரான எழுத்தாளர் சுஜாதா மட்டும்தான் இது போன்ற பழமை வாய்ந்த வரலாற்று கட்டுமானங்களை வெளிநாடுகளில் மாற்ற மாட்டார்கள்; அது தேவையற்றது என்று எழுதினார். ஆனால் பெரும்பாலானவர்கள் கோபுரத்திற்கு ஆதரவாகவே இருந்தார்கள்.

தமிழ்நாடு இந்து அறநிலையத் துறை மட்டுமன்றி, கர்நாடக, ஆந்திர அரசுகளும் கோபுரம் கட்ட நிதியுதவி செய்தன. இசையமைப்பாளர் இளையராஜா உதவினார். மேலும் பொதுமக்களிடமிருந்து நன்கொடை கணிசமாகத் திரட்டப்பட்டது. கோபுரம் கட்டி முடிக்கப்பட்டு 1987ஆம் ஆண்டுதிறக்கப்பட்டது. உலகிலேயே உயரமான கோயில் கோபுரம் இதுதான் என்று கூறப்படுகிறது.

எதற்காக இவ்வளவும் கூறுகிறேன் என்றால் கோபுரம் கட்ட எவ்வளவு ஆதரவு திரண்டது, எப்படி மூன்று மாநில அரசுகள் உதவின என்பதையெல்லாம் நினைவு படுத்தத்தான். முக்கியமான சுற்றுலாத்தலம் திருவரங்கம். தினமும் நூற்றுக்கணக்கான இந்திய, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். திருவிழாக்காலங்களில் பல பத்தாயிரம் மக்கள் திரள்வார்கள். வருடம் முழுவதும் பக்தர்களால் நிறைந்திருக்கும் பண்டைய தலம்.

**அங்கே அந்த பிரம்மாண்ட ராஜகோபுரத்திற்கு நூறு மீட்டர் தூரத்தில் ஒரு வெண்கலச் சிலையொன்று வீற்றுள்ளது. அதுதான் பெரியார் சிலை. அதில் கடவுள் கொள்கையை கேள்வி கேட்கும், மறுதலிக்கும் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. அருகில் சென்று படிப்பவர்களுக்குத்தான் அவை தெரியும். அந்த சிலை இருப்பதால் கோயிலில் கூட்டம் குறைந்து விடவில்லை. அது அந்த சிலையின் நோக்கமும் இல்லை.**

மக்களாட்சியில் பொதுவெளி என்பது கருத்துக்கள் களமாட இடமளிக்கவேண்டும். கடவுளை நம்புவது, இறைமுதல்வாதம் ஒரு கருத்து நிலையென்றால், கடவுள் மறுப்பு, பிரகிருதிவாதம் மற்றொரு கருத்து நிலையாகும். கடவுளை நம்புபவர்கள் ஒரு பிரம்மாண்டமான ராஜகோபுரத்தைக் கட்டலாம் என்றால், கடவுள் மறுப்பாளர்கள் அதன் முன் ஒரு சிறிய சிலையைக் கூட வைக்கக் கூடாதா என்ன? அந்த சிலை அங்கேயிருப்பது கடவுள் நம்பிக்கையாளர்களை புண்படுத்தும் என்றால், அந்த கோயிலும், ராஜ கோபுரமும் கடவுள் மறுப்பாளனான என்னை புண்படுத்தாதா?

கடவுள் கோட்பாடும், கடவுள் மறுப்புக் கோட்பாடும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள். ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை. என்றைக்கு கடவுள் என்ற சொல், பிம்பம், கருத்தாக்கம் தோன்றியதோ, அன்றைக்கு அதற்கான மறுப்பும் உடன் தோன்றி விட்டது.



முன்பு கடவுள் பற்றையே ஆதாரமாகக் கொண்டு ஆட்சி நடந்த காலத்தில் மாற்று மத நம்பிக்கையாளர்களைக் கூட அப்புறப்படுத்தும் கொடுங்கோன்மை நிலவியது. தில்லை கோவிந்தரை கடலில் வீசினான் சைவ மத வெறியனான ஒரு சோழ அரசன்.

மக்களாட்சியில் அப்படி ஒரு மதச்சார்பு அரசு சாத்தியமல்ல; பொருத்தமானதும் அல்ல. ஆத்திகர்களுக்கும், நாத்திகர்களுக்கும், நம்பிக்கையாளர்களுக்கும், நம்பிக்கை அற்றவர்களுக்கும் பொதுவான அரசுதான் மக்களாட்சி அரசாக இருக்க முடியும்.

பெரியாரின் கடவுள் மறுப்பு என்பது சுயமரியாதைக்கான கடவுள் மறுப்பு. பூசக வம்சத்தின் வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அடிமை வாழ்வு வாழ மறுப்பதற்கான கடவுள் மறுப்பு. “கடவுளை மற, மனிதனை நினை” என்ற மானுட முன்னுரிமை சார்ந்த கடவுள் மறுப்பு;

**மயில்சாமி அண்ணாதுரை கூறிய சுயமாக சிந்திக்கும் ஆற்றலை வளர்ப்பதற்கான கடவுள் மறுப்பு. “நட்ட கல்லும் பேசுமோ?” என்று கேட்ட சித்தர் மரபின் ஒருவகையான தொடர்ச்சிதான் அந்த கடவுள் மறுப்பு.**

**அதனால்தான் மக்கள் அந்தச் சிலையையும் மதிப்பார்கள்; கோயிலுக்கும் செல்வார்கள். சுயசிந்தனையின் ஆன்மீகம், பரவசத்தின் ஆன்மீகம் இரண்டையும் ஏற்பவர்களாகவே பண்பட்ட மக்களின் மனோநிலை அமைகிறது.**

**ஆனால் மூட நம்பிக்கையாளர்களும், மத வெறியர்களும், மத அடையாள அரசியல்வாதிகளும்தான் மாற்றுக் கருத்தை அப்புறப்படுத்த நினைப்பார்கள். காலம் அவர்களைத்தான் அப்புறப்படுத்தும். பெரியார் சிலை என்பது மானுட சிந்தனையின் மறு வடிவமே. அதன் ஆன்மீகம் மக்களாட்சியின் ஆன்மீகம்.**

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



கலைஞர் 100
1924 - 2023
2வது இளைஞர் அணி மாநாடு 2023
நாள்: 17-12-2023 இடம்: சேலம்
மாநில உரிமைகளை மீட்க அழைக்கின்றார்
கழக இளைஞரணி செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர்களே அணி அணியாய் திரண்டு வாரீர்
மாபெரும் பிரச்சார பயணம்
நவ. 15 முதல் 27 வரை
13 நாட்கள் — 8,647 கி.மீ.
188 இருசக்கர வாகனங்கள்
504 பிரச்சார மையங்கள்
234 சட்டமன்ற தொகுதிகள்
DMK RIDERS
DMK RIDERS
குமரியில் இரு சக்கர வாகன பிரச்சார பேரணி தொடக்க விழா 15-11-2023
ரெ.மகேஷ் B.A.,BL.,
நாகர்கோவில் மாநகராட்சி மேயர்
குமரி கிழக்கு மாவட்ட செயலாளர்
கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க


நவம்பர்–15 புதுக்கோட்டையில்
ரூ.58 கோடி மதிப்பீட்டில்
பல் மருத்துவ கல்லூரி மருத்துவமனை
மற்றும் துணை சுகாதார நிலையம்,
புறநோயாளிகள் பிரிவு, செவிலியர் குடியிருப்பு
ஆகியவற்றை காணொலி வாயிலாக திறந்து வைக்கும்
மாண்புமிகு.
தமிழ்நாடு முதல்வர்
அவர்களுக்கும்
கழக இளைஞர் அணி செயலாளர்,
இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின்
அவர்களுக்கும்
மாண்புமிகு. மா.சுப்பிரமணியன்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்களுக்கும்
நன்றி! நன்றி!!
HOSPITAL
எஸ்.ரகுபதி B.Sc., BL.,
சட்டத்துறை அமைச்சர்,
மாவட்ட கழக செயலாளர்–புதுக்கோட்டை (தெ)
கே.கே.செல்லபாண்டியன்
மாவட்ட கழக செயலாளர்–புதுக்கோட்டை (வ)
புதுக்கோட்டை மாவட்ட திமுக



திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் விடுமுறை தினம் முடிந்து ஊர் திரும்ப கூட்டம் அலைமோதியதால் ஆய்வு மேற்கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். ஆய்வின் போது அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்ட மேலாண் இயக்குனர் ஆர்.மோகன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் எஸ்.சக்திவேல் மற்றும் போக்குவரத்துத்துறை அதிகாரிகள், தொ.மு.ச. மாவட்டச் செயலாளர் குணசேகர் உட்பட பலர் உடன் இருந்தனர்.



நாகை மாவட்டம் நாகை நாகநாதர் மேல வீதியைச் சேர்ந்த குஞ்சம்மாள் என்பவரது கூரை வீடு வெடி வெடித்தபோது தீப்பிடித்து சேதம் ஏற்பட்டது. இதையடுத்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என். கௌதமன் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி கழகத்தின் சார்பில் நிதி உதவி வழங்கினார். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நகரக் கழக துணைச் செயலாளர் சித்திராகுலோத்துங்கன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் செல்வா, வார்டு நிர்வாகிகள் துரையரசன், அர்ச்சுனன், நாகதேவன் மற்றும் பலர் உள்ளனர்.

### தலைமைக் கழகப் பேச்சாளர் - திருச்செங்கோடு

# முரசொலி முத்து மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*சென்னை, நவ. 15-*

நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு நகரக் கழக முன்னாள் செயலாளரும் தலைமைக் கழகப் பேச்சாளருமான முரசொலி முத்து நேற்று முன்தினம் (13.11.2023) காலை 11 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், தோழர்கள் ஏராளமானோர் மறைந்த முரசொலி முத்து உடலுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



### நன்னியூர் ராஜேந்திரன் தலைமை! இல.பத்மநாபன் வாழ்த்துரை!

# மேற்கு மண்டல நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர்கள் க.பொன்முடி - மு.பெ.சாமிநாதன் - ஆர்.காந்தி சிறப்புரை!

*திருப்பூர், நவ. 15-*

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்தியம், தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, நீலகிரி உள்ளடக்கிய மேற்கு மண்டல நெசவாளர் அணி மாவட்ட மாநகர, தலைவர், துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம் இன்று (15.11.2023 - புதன் கிழமை) காலை 10.00 மணியளவில் கலைஞர் அறிவாலயம், பலவஞ்சிபாளையம் பிரிவு, திருப்பூர் - 08 எனும் முகவரியில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமை வகிக்கிறார்.

ஒ.ஏ.நாகலிங்கம், க.பழனிச்சாமி, காஞ்சி தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை, சொ.பெருமாள், சிந்து ரவிச்சந்திரன், வசந்தம் ஏ.சி.ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, மு.கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் வரவேற்கிறார். கே.எம்.நாகராஜன் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, மு.பெ.சாமிநாதன், ராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் வாழ்த்துரை வழங்குகிறார். கே.எஸ்.பி.ராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் அனைத்து நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தலைமைக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### முத்தமிழறிஞர் கலைஞரின் மைத்துனரும்

### கழக மூத்த முன்னோடியுமான

# கோயில் திருமாளம் தட்சிணாமூர்த்தி 101-ஆவது பிறந்த நாள்!

## ‘முரசொலி’ வாழ்த்தி மகிழ்கிறது!

**சென்னை, நவ. 15-**

**திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஒன்றியம் - கோயில் திருமாளத்தைச் சேர்ந்த கழகத்தின் மூத்த உறுப்பினர் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு 101-வது பிறந்த நாள்.**

**இதனையொட்டி அவரை முரசொலி வாழ்த்தி வணங்குகிறது.**

கழக மூத்த முன்னோடி கோ.தட்சிணாமூர்த்தி அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களின் துணைவியார் தயாளு அம்மையாரின் மூத்த சகோதரர் ஆவார். இவர் தமது இளமைக் காலந்தொட்டு கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். கோ.தட்சிணாமூர்த்தி அவர்கள் கழகத்தின் மூத்த உறுப்பினரும் கோவில் திருமாளம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட வேளாண் ஒழுங்குமுறை விற்பனை குழுவின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர் ஆவார். இவர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் தன்னை பங்கு எடுத்துக் கொள்ள செய்தவர் ஆவார்.

குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்று சிறைவாசம் அனுபவித்தவர்என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கழகத் தலைவர் தளபதி அவர்கள் கைகளால் பொற்கிழி பெற்றவர் என்பதும் கூடுதல் சிறப்பாகும்.

திருமாளம் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களைப் பற்றி மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் தனது நெஞ்சுக்கு நீதி புத்தகத்தில் பக்கம் 241ல் நீண்ட நினைவுகளை பதிவு செய்திருப்பது மேலும் பெருமைக்கு உரியதாகும்.

கோ.தட்சிணாமூர்த்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி அவருக்கு ‘முரசொலி’ பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்கிறது.

# முதலமைச்சரும் தீபாவளி வாழ்த்தும்!

## கவிப்பேரரசு வைரமுத்து பதில்!





**ஊடகத்தார் கேள்வி:**

*தீபாவளிக்கு முதலமைச்சர் வாழ்த்துச் சொல்லவில்லை என்று சொல்கிறார்களே?*

**கவிப்பேரரசு வைரமுத்து பதில்:**

**மகளிர்க்கு உரிமைத்தொகை வழங்கிய தன்மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதலமைச்சர் வாழ்த்துச் சொல்லிவிட்டாரே! ஒரு பழமொழி உண்டு: “சொல் என்பது பித்தளை; செயல் என்பது தங்கம்.” பித்தளையால் வாழ்த்துவதைவிட தங்கத்தால் வாழ்த்தியிருக்கிறார் தங்கத் தளபதி. சொல்லால் வாழ்த்துவதைவிட செயலால் வாழ்த்துவது சிறப்பல்லவா?**

# மாதவரத்தில் ஆட்டோ ஓட்டுநர் சங்க ஆண்டு விழா!

*சென்னை, நவ. 15-*

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 16 வது வட்டம், மணலி புதுநகர் பகுதியில் அமைந்துள்ள தொழிலாளர் முன்னேற்ற சங்க ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழா மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே நடைபெற்றது.

சென்னை பெருநகர ஆட்டோ ஓட்டுநர் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் கடந்த ஐந்தாண்டுகளாக தொடர்ந்து பெயர் பலகை திறப்பு விழா மற்றும் கழக கொடியேற்று விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு 16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமை தாங்கினார். கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதி நா.மோகன் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள் எல்.சரவணன், எஸ்.மைக்கேல், ஆர்.லோகநாதன், இ.சுரேஷ், பி.சந்துரு, கே.மணி, பி.செல்வம், சாமுவேல், ஆர்.சுந்தர், ஜி.செழியன், எம்.முத்து ஆகியோர் வரவேற்றனர்.

மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு சங்க பெயர் பலகையும் கழகக் கொடியையும் ஏற்றி வைத்து ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வக்கீல் பி.கே.கண்ணன், கார்த்திகேயன், சி.எம்.ராஜா, பிரபு, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், மணிகண்டன், உதயகுமார், கடப்பாக்கம் கிருபாகரன், குளக்கரை ரிஷி, நித்யா, யாசின், ஸ்டாலின், ஜான்பால், வி.கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கொண்டாடினர். முன்னதாக மணலி புதுநகர் பகுதியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு கழக நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெங்கிடங்கால் சந்தானம்

### நவம்பர் 15 (2005)



**நாகை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.**

**நெருக்கடி நிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.**

**1967ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது தலைவர் கலைஞர்மீது மாற்றுக் கட்சியினர் தாக்குதல் நடத்தியபோது கலைஞரை உடனிருந்து பாதுகாத்தவர்களில் இவரும் ஒருவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



# நான் அவன் இல்லை...

பிரதமர் நரேந்திர மோடி OBC எனும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் இல்லை. இவர், பிறப்பால், 'மோத் கஞ்சி' (Moth Ghanchi) என்ற உயர்சாதியைச் சார்ந்தவர் என்றும், பெரும்பான்மையாக வாழும்

இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காகவே 2001-ல், மோடி குஜராத்தின் முதல்வரான பிறகு, தான் பிறந்த உயர் ஜாதியை, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பில் (OBC) இணைத்துவிட்டார் என்றும், காங்கிரசு கட்சியைச் சார்ந்த, முன்னாள் குஜராத் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சக்திசின் கோஹில் (SakthiSinh Gohil) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம், தான் பெற்ற தகவலைப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இது குறித்து, குஜராத் அரசின் செய்தித் தொடர்பு அதிகாரி நிதின் பட்டேல் அரசு சார்பாக கருத்து தெரிவிக்கும்போது, 'மோத் கஞ்சி' என்ற உயர்ஜாதியை 25 ஜூலை 1999 அரசு ஆணை எண்: 25(b)-ல், இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தோடு இணைக்கப்பட்ட தகவலைத் தெரிவித்தார். இதன்படி, 17 செப்டம்பர் 1950 முதல் 24 ஜூலை 1999 வரை ஏறத்தாழ 50 ஆண்டு காலம் உயர் ஜாதியாக இருந்த நரேந்திர மோடி கடந்த 23 ஆண்டுகளாக, இதர பிற்படு த்தப்பட்ட வகுப்பினராக வலம் வருகிறார் என்பதை குஜராத் அரசு ஆவணம் தெளிவுபடக் கூறுகிறது. உயர் ஜாதியாகப் பிறந்த மோடி இன்று இல்லை. இன்று இருக்கிற 'OBC மோடி' 1999-க்கு முன்னர் இல்லை. ஏனெனில்,....



**பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்,**
கழக செய்தித் தொடர்பு செயலாளர்,
ஆசிரியர் - The Rising Sun.

இந்த சூழ்நிலையில்தான், விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெறவிருக்கும் சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள பிலாஸ்பூர் மாநகரில் தேர்தல் பிரச்சாரத்தின்போது, தான் (மோடி) ஒரு OBC என்றும், தன்னை அவமானப்படுத்துவது ஒட்டுமொத்த OBC சமூகத்தையே அவமானப்படுத்துவதைப் போன்றது என்றும் பரிவர்த்தன் மஹா சங்கல்ப் என்ற மக்கள் சந்திப்பில் தன்னை ஒரு OBC ரட்சகரைப் போல் அங்கலாய்த்துக் கொண்டார்.

பிறப்பால் அப்படி, பிறகு இப்படி என்றாலும், இன்றைக்கு மோடி தன்னைக் காட்டிக் கொள்ளக் கூடிய OBC-ன் ரட்சகராக உண்மையிலே இருக்கிறாரா? என்றால், புள்ளி விவரங்கள் நேர் மாறாக சொல்லுகிறது....எப்படி எனில், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, இந்தியாவில் OBC 52.1%, SC 18.6%, ST 8.6% மற்றும் OC 20.7% ஆகும். மோடி தலைமையிலான இந்த அரசில் 303 பா.ஜ.க. எம்.பிக்கள் உள்ளனர். இதில், OBC 85 (28.5%) பேர், SC/ST 77 (25.4%) பேர், OC 141 (46.1%) பேர் உள்ளனர். அதாவது, ஏறத்தாழ 80% உள்ள OBC, SC/ST மக்களுக்கு 54%-மும், 20% மட்டுமே உள்ள உயர்ஜாதி மக்களுக்கு 46%-மும் கொடுக்கப்பட்டுள்ளது. மோடியின் அமைச்சரவையில் உள்ள 79 அமைச்சர்களில், OBC 27 (34.2%) பேர், SC/ST 20 (25%) பேர் மற்றும் OC 33 (41%) பேர் அமைச்சர்களாக உள்ளனர். இதிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும், அமைச்சர்கள் எண்ணிக்கையிலும் ஏறத்தாழ 80% உள்ள இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை விட, 20% உள்ள உயர்ஜாதி மக்களின் பிரதிநிதிகளே கோலோச்சுவது தெள்ளத்தெளிவாக புலப்படுகிறது.

ஜனநாயகத்தில், சட்ட, திட்டங்கள் இயற்றும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திலே சமூகநீதி இவ்வளவு மோசம் என்றால், அதை நடைமுறைப் படுத்துகின்ற நிர்வாகத் துறையில் இன்னும் சீர் குலைக்கப் பட்டிருப்பதாகவே அறிய முடிகிறது. 28 மார்ச் 2023-ல், கேரள நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ் அவர்களின் IAS, IPS மற்றும் IOFS பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரங்கள் குறித்த கேள்விக்கு, ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திரா எழுத்து மூலமாக பதிலளிக்கையில், 2018-லிருந்து, 2022 வரைக்குமான ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 4365 அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும், அதில், OBC 695 (15.9%) பேர், sc 334 ( 7.65%) பேர், ST 166 (3.8%) பேர் மற்றும் Oc 3170 (72.6%) தெரிவித்துள்ளார். அதோடு, பாராளுமன்றத்தில் உள்ள அரசுத்துறை முதன்மைச் செயலாளர்கள் 90 பேரில், 3 பேர்தான் OBC வகுப்பை சார்ந்தவர் என்ற அதிர்ச்சித் தகவலினை 20 செப்டம்பர் 2023ல், காங்கிரசு இளம் தலைவர் ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் தெரிவித்தபோது, ஒட்டுமொத்த இந்தியாவே அதிர்ந்து நின்றது.

நீங்கள் உண்மையிலேயே OBC தலைவர் எனில், இந்த எண்ணிக்கை இப்படி இருக்காதே என்று மோடியைக் கேட்டால், அது அப்படித்தான் இருக்கும். ஏனெனில்,.....

இந்திய அரசியலமைப்பின்படி, நமது ஜனநாயக அரசின், அதிகாரப் பகிர்வு என்பது, சட்டம் இயற்றுதல், நடைமுறைப்படுத்துதல், நீதி பரிபாலனம் என்ற மூன்று அமைப்புகளுக்கு தனித்தனி அதிகாரங்களுடன் பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கிறது. இதில், சட்டமியற்றுதலிலும், அதை நிர்வகிக்கும் அதிகார அமைப்பிலும் உயர்ஜாதி ஆதிக்கம் இருப்பதை ஐயமற உணர முடிகிறது. ஒரு வேளை, நீதி பரிபாலனத்திலாவது இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட 80% மக்களுக்கான பிரதிநிதித்துவம் இருக்குமோ!? என்று பார்த்தால், ஒன்றிய சட்டத்துறை இது குறித்து, பாராளுமன்ற நிலைக்குழுவிற்கு, 9 ஜனவரி 2023-ல் அளித்த அறிக்கையில், 2018 முதல் 2022 வரையிலான ஐந்தாண்டு காலத்தில், உயர்நீதி மன்றங்களில் நியமிக்கப்பட்ட 537 நீதிபதிகளில், OBC 57 (11%) பேர், SC/ST 22 (4.1%) பேர், சிறுபான்மை 14 (2.6%) பேர், மற்றவர்கள் 20 (4%) பேர் மற்றும் OC 424 (79%) பேர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான ஆட்சியில், உயர்ஜாதியினரே எங்கும் வியாபித்திருப்பதை, 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் உணரமுடிகிறது.

**இது எப்படி என்று? பிரதமர் மோடியிடம் கேட்டால்,**

**அது**
**அப்படித்தான் இருக்கும்.**
**ஏனெனில்...**
**ஏனெனில்...**
**ஏனெனில்...**
**நான் அவன் இல்லை....**



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், லேனாவிளக்கு பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, "முத்தமிழ்த்தேர்" என்ற அலங்கார ஊர்தி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகைதந்ததையொட்டி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன்ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 13.11.2023 அன்று வரவேற்றனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, த.சந்திரசேகரன், ஞான.இளங்கோவன், க.மதியழகன், இரா.ஆனந்த், பொன்.ராமலிங்கம், சக்தி ராமசாமி, அரு.வடிவேல், தேவி, சுப.துரைராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஒன்றியம்

# பட்டாசு விபத்தில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதி உதவி!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.15-

இராணிப்பேட்டை மாவட்டத்தில் பட்டாசு வெடித்தபோது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, திமிரி ஒன்றியம், மாம்பாக்கம் ஊராட்சியில் தீபாவளியன்று பட்டாசு வெடித்தபோது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் சிறுமி நவிஷ்கா (வயது 4) த/பெ. ரமேஷ் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினருக்கும் அவருடைய உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாயும், இவ்விபத்தின்போது பலத்த காயமடைந்த விக்னேஷ் என்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை மாவட்டம்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு "முத்தமிழ்த்தேர்" அலங்கார ஊர்தி!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் - மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் பார்வையிட்டனர்!

புதுக்கோட்டை, நவ. 15-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், லேனாவிளக்கு மற்றும் புதுக்கோட்டை நகராட்சி, அண்ணாசிலை ஆகிய பகுதிகளில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, "முத்தமிழ்த்தேர்" என்ற அலங்கார ஊர்தி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகைதந்ததை யொட்டி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் 13.11.2023 அன்று வரவேற்று முத்தமிழ்த்தேரின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவககளின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஒரு நிலையான பங்களிப்பைத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு நடத்தப்பட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில், "எழுத்தாளர் கலைஞர்" குழு, படைப்புலகின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது

அந்தவகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் இன்றைய இளம் தலைமுறையினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையினை எடுத்துச் செல்லும் வகையில், எழுத்தாளர் கலைஞர் குழுவின் மூலம் அவரது புகழ்பாடும் "முத்தமிழ்த்தேர்" அலங்கார ஊர்தி 04.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கி அனைத்து மாவட்டத்திற்குச் சென்று கடைசியாக 04.12.2023 அன்று சென்னையில் முடிவடையும். இவ்வாகனம் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளது. இந்த வாகனம் "எழுத்தே எனது மூச்சு, எழுதுவதே எனது தினபழக்கம்" என்று முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய பேனா வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் தமிழ் சமூகத்திற்கு படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்லும் வகையில் "முத்தமிழ்த்தேர்" அலங்கார ஊர்தி அனைத்து மாவட்டங்களிலும் காட்சிப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

கலைஞர் அவர்களின் சிறப்புகளை விளக்கும் குறும்படமும் தொடர்ந்து திரையிடும் வகையில் ஒளித்திரையும் (LED WALL) அமைக்கப்பட்டுள்ளது. பேனா வடிவிலான இந்த வானகத்தின் பின்புறம் இயந்திரத்தினால் திறந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலங்கார ஊர்தியினை பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட அனைவரும் சென்று பார்வையிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் உள்ளே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுர இல்ல உள்அமைப்பு தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் உள்ளே அஞ்சுகம் அம்மாள் அவர்களின் உருவச்சிலையும் அதன் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருப்பது போன்ற உருவச்சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் நின்று பொதுமக்கள் Selfie எடுத்துக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் அவரது படைப்புகளும், அவரது பன்முகத் தோற்றத்தினை விளக்கும் ஒலி, ஒளி அமைப்பும் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கலைஞர் அவர்களின் எழுத்துகளால் உயிர்ப்பெற்ற கவிதை, கட்டுரை, புதினங்கள், காப்பியங்கள் போன்றவற்றை கைப்பேசி வாயிலாக இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் QR Code Scan மூலம் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அலங்கார ஊர்தியானது திருமயம் வட்டம், லேனாவிளக்கு மற்றும் புதுக்கோட்டை நகராட்சி, அண்ணாசிலை ஆகிய பகுதிகளில், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பார்வையிடும் வகையில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோரால், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வுகளில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்C க் வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிதைபித்தன், அரிமளம் ஒன்றியக் குழுத் தலைவர் மேகலா முத்து, நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, மாவட்ட சமூகநல அலுவலர்செல்வி.க.ந.கோகுலப்பிரியா, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், உள்ளாட்சி. பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## புவியின் துருவங்களில்

# பனிப்பாறைகள் வேகமாக உருகுகின்றன!

## ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை!

பெர்லின், நவ. 15 -

புவியின் துருவ பகுதிகளில் பனிப்பாறைகள் உருகி வரும் நிகழ்வு மிகவும் ஆபத்தான கட்டத்தை தொட்டு விட்டதாக ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒரு பூமி துருவம் என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் துருவ பகுதியில் அமைந்துள்ள நாடுகள் மற்றும் பனிப்பாறைகள் உள்ள 40 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

பின்னர் பேட்டியளித்த ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் ஜோசப் ஆஸ்ட்டா பாஸ்டர் பூமியின் வட மற்றும் தென்துருவங்களில் பனிக்கட்டி உருகுவது மிகவும் மோசமான நிலையை எட்டிவிட்டதாக எச்சரித்துள்ளார். குறிப்பாக ஆர்டிக் மண்டலத்தில் பனிக்கட்டிகள் மிகவும் வேகமாக உருகி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பனி உருகுதல் தொடர்பாக தங்கள் மையத்தின் செயற்கைகோள்கள் எடுத்த புதியபடங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

உலக நாடுகளுக்கு காலநிலை மாற்றம் தற்போது பெரிய சவாலாக மாறியுள்ளதாக ஐரோப்பிய விண்வெளி மையத்தின் தலைவர் ஜோசப் தெரிவித்துள்ளார்.

இந்த நூற்றாண்டின் மத்தியிலாவது கார்பன் உமிழ்வை குறைத்தாக வேண்டும் என்பது இவரது கருத்தாகும்.

பனிப்பாறைகள் உருகுவது வேகம் பிடித்திருப்பதால் கடல் நீர்மட்டம் இன்னும் வேகமாக உயர்வதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார். காலநிலை மற்றம் என்ற சவாலை எதிர்கொள்ள தனிப்பட்ட ஒவ்வொருவரின் பங்களிப்பும் தேவை என்று அவர் கூறியுள்ளார்.

அத்துடன் அரசியல் தலைவர்கள் உடனடியாக முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சென்னையில் 150 டன் பட்டாசு கழிவுகள் அகற்றம்!

சென்னை, நவ. 15–

தீபாவளி பண்டிகை முடிந்த நிலையில் தமிழகம் முழுவதும் டன் கணக்கில் பட்டாசுக் கழிவுகள் குவிந்துள்ளன. இந்த நிலையில் சென்னையில் பட்டாசுக் கழிவுகளை அகற்றும் பணியில் 19,600 தூய்மைப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களிலும் பட்டாசுக் கழிவுகளை சேகரிக்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கழிவுகளை கொண்டு செல்வதற்காக மண்டலத்திற்கு 2 வாகனங்கள் என மொத்தம் 30 வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை முதலே பட்டாசுக் கழிவுகளை அகற்றும் பணியில் மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டு வந்த நிலையில், சென்னையில் இதுவரை 150 டன் பட்டாசுக் கழிவுகள் அகற் றப்பட்டு இருப்பதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



மாநில இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி குடியரசுத் தலைவருக்கு கடிதம் அனுப்பும் வகையில் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இயக்கம் நடைபெற்று வருகிறது. அதனை தொடர்ந்து தஞ்சையில் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி தஞ்சை பகுதிகளில் உள்ள மருத்துவக் கல்லூரி, செவிலியர் கல்லூரிகள், பள்ளி மாணவ - மாணவியர்களிடம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பும் அஞ்சல் அட்டையில் கையெழுத்துப் பெற்றார். உடன் தஞ்சை மத்திய மாவட்ட மருத்துவர் அணி நிர்வாகிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் உள்ளனர்.



தஞ்சை மத்திய மாவட்டம், ஒரத்தநாடு தொகுதிக்குட்பட்ட ஒன்றியச் செயலாளர்கள் கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு, தி.மு.க. பவளவிழா ஆண்டில் சேர்க்கப்பட்ட புதிய உறுப்பினர் உரிமை சீட்டுகள் ஒன்றிய செயலாளர்களிடம் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட ஒரத்தநாடு தொகுதி பார்வையாளர் அக்ரி கே.பி.டி.கணேசன் நேரில் வழங்கினார். உடன் தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் துரை.சந்திர சேகரன் எம்.எல்.ஏ மற்றும் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம் எம்.பி ஆகியோர் உள்ளனர்.

### மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில் கோவை தெற்கு மாவட்ட

# இளைஞர் அணி சார்பில் நல உதவிகள்!

## கழக முன்னணியினர் வழங்கினர்!

கோவை, நவ. 15 - கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டும் தி.மு.க. இளைஞர் அணி 2ம் மாநில மாநாட்டை முன்னிட்டும் கோவை தெற்கு மாவட்டம் ஆனைமலை கிழக்கு ஒன்றியம் தென்சங்கம்பாளையம் ஊராட்சி, பெரியார் சமத்துவபுரம் அருகில் அமைந்துள்ள "உதவும் உள்ளங்கள்" முதியோர் காப்பகத்தில் முதியோர்களுக்கு இலவசமாக சிறுநீரக, இரத்தப்பரிசோதனை செய்யப்பட்டு உடனே சான்றிதழ்கள் வழங்கபட்டது, முதியோர்களுக்கு புத்தாடைகள் மற்றும் இனிப்புகள், காலை அறுசுவை உணவு வழங்கப்பட்டது. மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில் தென்சங்கம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவரும், பொதுக்குழு உறுப்பினருமான எஸ்.ஆர்.அண்ணாதுரை தலைமையில் முன்னாள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை வரவேற்புரையில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ரகுபதி, ஒன்றிய கவுன்சிலர் பாரதி நரசிம்மன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஊராட்சி அவை தலைவர் அங்கமுத்து, நகர மன்ற உறுப்பினர் மணிமாலா தென்றல், வெல்லம் சீனிவாசன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அரவிந்த் வசந்த்ராம், அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் அஜூஸ், ஊராட்சி மன்ற உறுப்பினர் ஞான பிராகாஷ், விவசாய அணி ஜெயசந்திரன், ராஜ், தகவல் தொழில் நுட்ப அணி அமீன், பொள்ளாச்சி நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் பைக்பாபு, நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ் பிரபு, நகர ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் நாகராஜ், நகர மாணவரணி துணை அமைப்பாளர் மகேந்திரன், 19வது வார்டு மணிகண்டன், பிரவீன்குமார், கே.ஜீ.நவீன்குமார், நகர தொழிற்சங்கம் தாஸ் பிரபு, தினேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மரக்காணம் ஒன்றியத்தில்

# ரூ.14 கோடி மதிப்பீட்டில் மீனவர்களுக்கான கூடம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்தார்!

மரக்காணம், நவ. 15 - விழுப்புரம் மாவட்டம் மீன்வள நலத்துறை சார்பில் மரக்காணம் ஒன்றியம் புது குப்பம், அணச்சகுப்பம் மற்றும் முதலியார் குப்பம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் உள்ள மீனவர்களின் கோரிக்கையை ஏற்று வலை பின்னும் கூடம், ஏலக் கூடம், உலர்க் களம், அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமையில் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆறுமுகம், ஞானசேகர், ஒன்றிய கவுன்சிலர் துர்கா தேவி கலைஞர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புது குப்பம்,முதலியார் குப்பம் ஆகிய ஊராட்சிகளில் தலா 7.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வலை பின்னும் கூடம், ஏல கூடம், உலர்க்களம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து முதலியார் குப்பத்தில் மீனவர்கள் வலை பின்னும் பணிகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், துணை சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மீன்வளத்துறை சென்னை திட்ட கோட்ட செயற்பொறியாளர் சரவணகுமார், மீன்வளத் துறை விழுப்புரம் மாவட்ட உதவி இயக்குனர் நித்திய பிரியதர்ஷினி, கடலூர் திட்ட கோட்ட செயற்பொறியாளர் கௌரிசங்கர்,மாவட்ட கவுன்சிலர் புஷ்பவல்லி குப்புராஜ், ஒன்றிய கவுன்சிலர் துர்கா தேவி கலைஞர், உதவி பொறியாளர் கடலூர் ஷோபனா, மீன்வளத்துறை ஆய்வாளர்கள் மரக்காணம் சிவ சூரியன், கோட்டகுப்பம் பெருமாள்,மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை மத்திய மாவட்டம்,

# ஒரத்தநாடு தொகுதிக்குட்பட்ட ஒன்றியச் செயலாளர்கள் கூட்டம்!

## எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, -அக்ரி கே.பி.டி.கணேசன் பங்கேற்பு!

தஞ்சாவூர், நவ. 15 - தஞ்சை மத்திய மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் ஒரத்தநாடு சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட திமுக வாக்குச்சாவடி குழுக்கள் ( BLC ) ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஒன்றிய செயலாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட ஒரத்தநாடு தொகுதி பார்வையாளர் அக்ரி கேபிடி கணேசன் (மாநில தீர்மானக் குழு செயலாளர் தலைமை வகித்தார். தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் துரை.சந்திர சேகரன் எம்.எல்.ஏ மற்றும் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம் எம்.பி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு, தி.மு.க. பவளவிழா ஆண்டில் சேர்க்கப்பட்ட புதிய உறுப்பினர் உரிமை சீட்டுகள் ஒன்றிய செயலாளர்களிடம் நேரில் வழங்கப்பட்து. திராவிட மாடல் அரசில் நலத்திட்டங்களை பெறும் நபர்கள் குறித்த விபரங்களையும் வாக்காளர்கள் எந்த கட்சியின் அனுதாபிகள் மற்றும் பிற்படுத்த ப்பட்ட மிகவும் பிற்படுத்தப் பட்டவர்கள் போன்ற எந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற விவரங்கள் சேகரிக்கும் படிவங்களை ஒன்றியச் செயலாளர்களிடம் வழங்கப்பட்டது..

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, தஞ்சை தெற்கு ஒன்றிய செயலாளர் தோ.அருளானந்த சாமி, ஒரத்தநாடு வடக்கு ஒன்றிய செயலாளர் கு.செல்வராஜ், தெற்கு ஒன்றியச் செயலாளர் முருகையன், மேற்கு ஒன்றியச் செயலாளர் ரமேஷ், கிழக்கு ஒன்றியச் செயலாளர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் புது குப்பம், முதலியார் குப்பத்தில் உள்ளமீனவர்களின் கோரிக்கையை ஏற்று 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீனவர்களுக்கு வலை பின்னும் கூடம், உலர்க்களம், ஏலக் கூடம் அமைப்பதற்குசிறுபான்மையர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மத்திய ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன், மீன்வளத்துறை சென்னை திட்ட கோட்ட செயற்பொறியாளர் சரவணகுமார், உதவி இயக்குனர் நித்திய பிரியதர்ஷினி ஆகியோர் உள்ளனர்.



கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, கொரநாட்டுக் கருப்பூர் ஊராட்சி, கீழத் தெருவில் வசித்து வரும் கவிதா – சேகர் மற்றும் ஞானமணி, அருள்தாஸ் ஆகியோரது குடிசை வீடுகள், தீபாவளி பட்டாசு வெடிக்கும் போது, தீ விபத்து ஏற்பட்டு, மிகவும் பாதிக்கப்பட்டது. தகவல் அறிந்த, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், நேரில் சென்று, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கி, ஆறுதல் கூறினார்கள். மேலும், அரசு நிவாரண உதவிகள் கிடைக்க வழிவகை செய்தார்கள். நிகழ்வில், கும்பகோணம் வட்டாட்சியர் பி.வெங்கடேஸ்வரன், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஜெ.சுதாகர், ஒன்றிய குழு உறுப்பினர் ஆனந்தி முருகன், ஊராட்சி மன்ற தலைவர் சுதா அம்பிகாபதி, துணைத் தலைவர் சரவணன், மாவட்ட தி.மு.க. பிரதிநிதி உதயம் கோவிந்த், ஒன்றிய அவைத்தலைவர் பி.அபிராமிசுந்தரம் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பாஸ்கர், உலகநாதன், கருணாகரன், பழனிசாமி, சுரேஷ், பாலையா, ரமேஷ் உள்ளனர்.

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இன்று (15.11.2023 - புதன்கிழமை), காலை 11.00 மணி அளவில் சென்னை, பட்டாபிராம் - 72, மகாத்மா காந்தி சாலை, எண்:5-ல் உள்ள எனது (ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.) கலைஞர் இல்ல சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் மற்றும் இணை செயலாளர்கள் மருதூர் ஏ.ராமலிங்கம், வி.பி.ராஜன், திப்பம்பட்டி ஆறுசாமி, செ.புஷ்பராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் துணைச் செயலாளர்கள் பி.துரைசாமி, சா.இராசேந்திரன், மு.பொன்தோஸ், சி.தசரதன், மு.பரமானந்தம், மாரியப்பன் கென்னடி ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** நீட் தேர்வினை ரத்து செய்யக்கோரி கையெழுத்து இயக்கம் நடத்துவது மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில கூட்டம் நடத்துவது குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.11.2023

**ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு



கழக இளைஞர் அணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டும் தி.மு.க. இளைஞர் அணி 2ம் மாநில மாநாட்டை முன்னிட்டும் கோவை தெற்கு மாவட்டம் ஆனைமலை கிழக்கு ஒன்றியம் தென்சங்கம்பாளையம் ஊராட்சி , பெரியார் சமத்துவபுரம் அருகில் அமைந்துள்ள "உதவும் உள்ளங்கள்" முதியோர் காப்பகத்தில் முதியோர்களுக்கு இலவசமாக சிறுநீரக, இரத்தப்பரிசோதனை செய்யபட்டு உடனே சான்றிதழ்கள் வழங்கபட்டது, முதியோர்களுக்கு புத்தாடைகள் மற்றும் இனிப்புகள், காலை அறுசுவை உணவு வழங்கப்பட்டது. மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில் தென்சங்கம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவரும் , பொதுக்குழு உறுப்பினருமான எஸ்.ஆர்.அண்ணாதுரை தலைமையில் முன்னாள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை வரவேற்புரையில் ஊராட்சி மன்ற துணை தலைவர் ரகுபதி , ஒன்றிய கவுன்சிலர் பாரதி நரசிம்மன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. பெரியண்ணன்

**நவம்பர் 15 (1996)**



புதுக்கோட்டை மாவட்டக் கழகச் செயலாளராக 1974ஆம் ஆண்டு முதல் பல்லாண்டு காலம் தொடர்ந்து பணியாற்றியவர்.

நெருக்கடிநிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இருமுறை சட்டப்பேரவை உறுப்பினராக திறம்பட பணியாற்றியவர்.

1996ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்தபோது அரசின் கொறடாவாக பணியாற்றினார்.

"அந்தோ, புதுக்கோட்டை பெரியண்ணன் மறைந்தார். இது செய்தி அல்ல. என் இதயத்தில் மட்டுமல்ல கழக உடன்பிறப்புக்கள் எல்லோரின் இதயத்திலும் மூண்டுவிட்ட செந்தீ! இளமை முதல் நெருப்பாற்றில் நீந்தி பெரியாரின் கொள்கைகளை, அண்ணாவின் கோட்பாடுகளைக் காத்த மாவட்டத்தின் புலிப்போத்து அவர்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் 'அண்ணா விருதி'னை வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தலைமைக் கழகப் பேச்சாளர்- திருச்செங்கோடு

# முரசொலி முத்து மறைவு!

## முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 15 - திருச்செங்கோடு நகரக் கழக முன்னாள் செயலாளரும் தலைமைக் கழகப் பேச்சாளருமான முரசொலி முத்து மறைவுச் செய்தி அறிந்து முதல்வரும் - கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

திருச்செங்கோடு நகர கழக முன்னாள் செயலாளரும், தலைமைக் கழகப் பேச்சாளருமான கழகத்தின் மூத்த முன்னோடி முரசொலி முத்து அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறேன். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### கழக துணைப்பொதுச்செயலாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பி.கீதாஜீவன் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளருமான பி.கீதா ஜீவன் ஆகியோர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி நிரல் விபரம்:-

**நாள் : 17.11.2023 வெள்ளிக்கிழமை**

**நேரம் - நிகழ்ச்சி நடைபெறும் இடம் - ஒன்றியத்தின் பெயர் - நிகழ்ச்சி விபரம்:-**

மாலை 4.00 மணி - காடல்குடி - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 5.00 மணி - மாவிலோடை - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 6.00 மணி - என்.ஜெகவீரபுரம் - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

இரவு 7.00 மணி - கந்தசாமிபுரம் - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

இரவு 8.00 மணி - மாதலப்புரம் - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை டி. சுந்தரம்

**நவம்பர் 15 (2012)**



புதுக்கோட்டை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 25 ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகத் துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராக தொடர்ந்து 25 ஆண்டுகளாக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுக்கோட்டை அர்பன் கூட்டுறவுப் பண்டகச் சாலையில் தொடர்ந்து இயக்குநராகவும் – ஒருமுறை துணைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"உழைப்பும், தியாகமும், நேர்மையும் இருந்தால் மட்டுமே உள்ளூரில் தொடர்ந்து நகர்மன்ற உறுப்பினராக வரமுடியும் என்பதை நிரூபித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


2 வது இளைஞரணி மாநாட்டில் இணைவோம் ! மாநில உரிமை மீட்போம் !
2வது இளைஞர் அணி மாநாடு 2023
2 வது இளைஞர் அணி மாநாடு
நாள் : 17 - 12 - 2023 இடம் : சேலம்
குமரியில் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணியை தொடங்கி வைப்பவர்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
இடம் : கன்னியாகுமரி
நாள் : 15.11.2023 நேரம் : காலை 11.15
மாபெரும் பிரச்சார பயணம்
நவம்பர் 15 முதல் 27 வரை
13 நாட்கள் - 8,647 கி.மீ.
188 இருசக்கர வாகனங்கள்
504 பிரச்சார மையங்கள்
234 சட்ட மன்ற தொகுதிகள்
DMK RIDERS
மாநில உரிமைகளை மீட்க அழைக்கின்றார் நம் சின்னவர்
இளைஞர்களே அணி அணியாய் திரண்டு வாரீர்
மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி
அமைச்சர் - பள்ளிக் கல்வித்துறை
மாவட்ட செயலாளர் - திருச்சி தெற்கு மாவட்டம்
அன்புடன்
அ.ராஜா தமிழ் மாறன்
RKK.கார்த்தி, P.பிரபின்
வள்ளுவர் மண்டலம்
M.S.ராஜ்குமார், P.G.சன் சுரேஸ்
பெரியார் மண்டலம்
K.குட்டி, T.R.ரவிச்சந்திரன்
அண்ணா மண்டலம்
பர்மா M.ரூபன், G.முத்துக்குமார்
கலைஞர் மண்டலம்

# திராவிடப் போராளிகள்

43 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## அலர்மேலு : முதல் 30 பேரில் ஒரே பெண் தலைவர்



ஓவியம் : ரவி பேலட்

அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் திராவிடப் போராளிகளில் மூத்தவர் என்று சொல்வதற்கான தரவுகள் அவர் பங்கேற்ற நிகழ்வுகளைப் பற்றிய குறிப்புகளில்தான் கிடைக்கின்றன.

அவற்றிலிருந்து, அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், சென்னை எழும்பூர் பகுதியில் வாழ்ந்தவர். வசதி வாய்ப்புகள் நிறைந்த குடும்பப் பின்னணி உடையவர். கடவுள் நம்பிக்கையும் காந்தியக் கொள்கையில் ஈடுபாடும் கொண்டவர்.

பார்ப்பனர்களின் சாதி ஆணவப் போக்கினை தன் அனுபவங்களால் உணர்ந்தவர். அதனால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் அவருக்கு நாட்டம் ஏற்பட்டுள்ளது. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் முதல் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற முப்பது பேரில் அவர் மட்டுமே பெண் தலைவர் என்பது அவரது ஆளுமைக்குச் சான்று.

### மூன்று செய்திகள்

அவரைப்பற்றிய மூன்று செய்திகள் மிக முதன்மையானவை.

1914 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், சாதி அமைப்பைத் தடை செய்ய வேண்டுமென்றும், பெண் கல்வியை ஊக்கப்படுத்தவும்,பெண்களின் சொத்துரிமை, சாதி மறுப்புத் திருமணம் செய்யும் உரிமை ஆகியவற்றைக் காக்க சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்து, வலியுறுத்தி உரையாற்றினார் என்ற செய்தி, 1914 ஆம் ஆண்டு டிசம்பர் 'நியூ இந்தியா' ஏட்டில் வெளிவந்ததாக ஒரு மின் ஆய்வு நூல் குறிப்பிடுகிறது. 'நியூ இந்தியா' என்ற நாளிதழை நடத்தியவர் அன்னி பெசன்ட் அம்மையார்.

1927 ஆம் ஆண்டு 'சுதேசமித்திரன்' ஏடு அம்மையாரை மரியாதை குறைவாகக் குறிப்பிட்டதும் பின்னர் அதற்கு சமாதானம் கூறியதும், குறித்த முழுமையான தகவல்களை இன்றைய தலைமுறை கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும்.

காங்கிரசு இயக்கத்திலும் காந்தியார் மீதும் மதிப்பு கொண்டிருந்த, வசதிபடைத்த, பார்ப்பனரல்லாத ஒருவருக்கு, 'சுதேசமித்திரன்' பத்திரிகை எப்படிப்பட்ட அவமரியாதையை இழைத்தது என்பதை, 1927 அக்டோபர் 'திராவிடன்' இதழில் 'பிராமணர்களும் பெண்மானமும்' என்ற தலைப்பில் அவரே எழுதிய கட்டுரை விளக்குகிறது.

சாதி ஏற்றத்தாழ்வும் சாதிக்கு ஒரு நீதியும் சொல்லும் சனாதனமும் என்பது சாதியமைப்பின் மேல்நிலையில் இருப்பவர்களுக்கு அளவற்ற மரியாதையைக் கொடுக்கும். மற்றவர்களை மனிதராகவே மதிக்காது என்பதற்கு இந்த நிகழ்வே எடுத்துக்காட்டு.

### 'சுதேசமித்திரன்' சாதிப் பற்று

எந்தக் கூட்டத்தில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் பேசியதை 'சுதேசமித்திரன்' பத்திரிக்கை மரியாதையின்றி எழுதியது என்ற விவரத்தையும் அம்மையாரே கூறுகிறார்.

"மித்திரன் பத்திரிகை ஒன்றிருக்க ஒன்றெழுதி வருகின்றது. அவமரியாதையிலும் கை எழுத ஓடுகின்றது. மகாத்மா காந்தி அவர்களுக்கு 9.9.27 இல் பெண்கள் பணமுடிப்பு கொடுத்த சமயத்திலும், ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வந்தனம் கூறினாள் என்று ஒரே ஒரு வாக்கியத்தில் எழுதியது. அவ்வாக்கிய முடிவும் அவமதிப்பிலே முடிந்தது. இதையெல்லாம் விபரீதமாய் நினைக்கப்படாதென்றாலோ, நானும் மற்றவர்களும் அப்படியே விபரீதமாய் நினைக்காதபடி, லேடி சதாசிவ அய்யர் காந்தியைப் புகழ்ந்து பேசினாள், டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் காந்திக்கு நல்வரவுப் பத்திரம் வாசித்துக் கொடுத்தாள், பிரம்மஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் மொழிபெயர்த்தான் என்று எதார்த்தமாய் எல்லாரையும் ஏகவசனமாய் ஏற்றத்தாழ்வின்றி அவசியம் எழுதியிருக்க வேண்டும். அப்பொழுது என்னைப்பற்றி எழுதியதும் எதார்த்தமென்று நினைப்பேன். மற்றவர்களும் நினைப்பார்கள். என்னை மட்டும் 'வந்தனம் கூறினாள்' என்று ஏகவசனமாய் எழுதவேண்டியது என்ன??."

ஒருவேளை முத்துலட்சுமி அம்மையாரையும் மரியாதைக் குறைவாக எழுதி இருந்தால் அலர்மேலு மங்கைத் தாயாருக்கு வருத்தம் வந்திருக்காதோ என்று நம் மனதில் ஓடும் கேள்விக்கு அடுத்த வரியில் அவரே பதில் சொல்கிறார்.

"ஸ்ரீமதி, சகோதரி முத்துலட்சுமி அம்மாள் அவர்களையும் மற்றவர்களையும் அகௌரவப்படுத்த வேண்டுமென்பது என் நோக்கமல்ல. சூதுவாதின்றி எல்லாரையும் கௌரவப்படுத்த வேண்டுமென்பதே என் நோக்கம். அவைகளை எடுத்துக் காட்டாவிட்டால் எப்படித் தெரியும்?"

இதற்கும் கூட சிலர் அது அந்தக் காலத்துப் பத்திரிகை மொழி என்று சமாதானம் சொல்ல முயல்வார்கள். ஆனால் உண்மை அதுவல்ல என்கிறார் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அதேபோல் மரியாதை என்பது எல்லோருக்கும் உரிமையானது என்றும் கூறுகிறார்.

"சுதேசமித்திரனைத் தவிர வேறெந்தப் பத்திரிகையும் ஏகவசனமாய் எழுதுவதில்லை. பிராமணர்களைத் தவிர மற்றெவரையும் அவள் இவள் என்று ஏகவசனத்தில் பேசுவதுமில்லை. பிராமணர்கள் தமிழ் பேசவும் எழுதவும் தெரியாதவர்களா? வெளிப்பட வேண்டும். எந்த ஜாதியாயினும், எந்த மதமாயினும், ஆணாயினும், பெண்ணாயினும், உயர்வாயினும், தாழ்வாயினும், யாராயினுஞ்சரி கௌரவமாக எழுதுவதல்லவோ ஒரு பத்திரிகையின் லக்ஷணம்".

### சனாதன மித்திரன் பரம்பரை

இந்தியப் பெண்களுடைய மரியாதையை மிஸ் மேயோ குறைத்துவிட்டார் என்று புலம்பிய 'சுதேசமித்திரன்', இந்திய (பார்ப்பனரல்லாத) பெண்களுக்கு என்ன மரியாதை கொடுத்தது என்ற அம்மையாரின் கேள்வி 'சுதேசமித்திரனின்' சாதி முகத்திரையைக் கிழித்துக் காட்டியது. மேலும் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு அலர்மேலு மங்கை தாயார் புதியவருமல்ல என்ற உண்மையையும் அம்மையார் அம்பலப்படுத்தினார்.

"இத்தேசத்திற்கு முற்றும் சம்பந்தமில்லாத ஓர் அமெரிக்க தேசப்பெண் இராஜதந்திரத்திலே இத்தேசப் பெண்களின் பெருமையை குறைவுபடுத்தினார் என்று ஆகாயமளவுமட்டும் எட்டி எட்டிக் குதிக்கின்றவர்கள், இத்தேச மாதரின் மரியாதை விஷயத்திலும் கவனிக்க வேண்டாமா? உள்ளதைச் சொன்னால் உடம்பெரியலாம். 1903 வருஷம் முதற்கொண்டு மித்திரன் பத்திரிகைக்கு விஷயதானத்திலே சம்பந்தப்பட்டுள்ளேன்.

பொதுவாழ்வில் ஈடுபடும் பெண்களை குறிப்பாக ஜாதி, மதம், ஆணாதிக்கம் இவற்றுக்கு எதிரான தத்துவங்களை முன்னெடுக்கும் பெண்களை இழிச்சொற்களால் அவமானப் படுத்துவது தெய்வபக்தி, தேசபக்தி என்ற பெயரால் இன்றும் அரசியல் செய்பவர்களின் வரலாறு என்பதற்கு இதைவிட, வேறு உதாரணம் தேவையில்லை.

ஏறக்குறைய 25 வருட காலமாய் என் சுய நன்மையை வெறுத்து பொது நன்மையை நாடி வேலையும் செய்தேன். ஆயினும் 'பெண்மானம்' என்பதைக் கவனியாத பெரியோர்கள் ஓர் பெரியோர்களா? இன்று என்னை அவள் இவள் என்று எழுதவும் பேசவும் முன்வந்தவர்கள் நாளை எவரையும் கேவலமாய் எழுத ஏன் துணியார்கள்?

இவர்களின் தேசாபிமானம் பற்றி எள்ளி நகையாடுகிறது அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளின் கட்டுரை.

மதுரை ஸ்ரீஜார்ஜ் ஜோசப் அவர்கள் சொன்னபடி பிராமணர்களுக்கு அநேகமாய் சுயஜாதி அபிமானமே அவர்களுடைய தேசாபிமானம். சுயராஜ்யம் வந்தால் நம்மை எந்நிலையில் வைப்பார்களோ? தேசம் எந்நிலையில் இருக்குமோ தெரியவில்லை. சுயராஜ்யமும் வரவேண்டியதே; வருவதற்குமுன் முக்கியமாய் பிராமணர்களும் மற்றவர்களும் திருந்த வேண்டும். கதர் உடுத்தி காந்திக்கு ஜே! என்று கத்திக் கதறி கல்லெடுத்தெறிகின்றார்கள். காந்தியடிகள் பெயரை ஒட்டியே இவ்வளவு விபரீதம் நடக்கின்றது. காந்தியடிகள் செவிக்கு அவ்வக்கிரம் எட்டுமோ எட்டாதோ ஈசனே அறிய வேண்டும். காந்தியடிகளை அவதாரமாக்கினும் அவர்சொன்னபடி நடப்பவர்தான் இலர். நிற்க...."

இந்தக் கட்டுரையின் முடிவில் இன்னொரு நிகழ்வைப் பற்றியும் அம்மையார் குறிப்பிடுகிறார்.

"நுங்கம்பாக்கம் (27.9.27) மீட்டிங்கிலும் நான் பேசினபோது பிரஸிடென்ட்டாய் இருந்த பிராமணர் எம்.ஏ.எல்.டி அய்யங்கார் அவர்களும் சபையாருக்கு என்னைப்பற்றி அறிவிக்கும்போது 'பேசுவாள்' என்றே சொன்னார். என்ன விபரீதம் பாருங்கள்".

இந்த விபரீதத்தைத்தான் இன்றைக்குச் சனாதனம் என்ற பெயரில் மீண்டும் நிறுவத் துடிக்கிறது மித்திரன் பரம்பரை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

### மாண்டிசோரி பள்ளி

அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளின் இறுதிக் காலம் குறித்துக் கிடைத்துள்ள மற்றொரு செய்தியும் அவரது பேருள்ளத்துக்குச் சான்றாகி நிற்கிறது.

சென்னையின் மையப் பகுதியான சிந்தாதிரிப்பேட்டையில் அலர்மேலு மங்கை தாயாரம்மாள் மாண்டிசோரி பள்ளி என்ற பெயரில் தொடக்கப் பள்ளி ஒன்று இன்றும் கல்விப் பணியாற்றி வருகிறது. ஏற்கெனவே செயல்பட்டு வந்த அந்தப் பள்ளியின் மேம்பாட்டுக்காகத் தனது இடத்தை அலர்மேலு மங்கை தாயாரம்மாள் தானமாக வழங்கியதாகவும் அதனால் அவரது பெயர் பள்ளிக்குச் சூட்டப்பட்டதாகவும் பள்ளி நிர்வாகி ஒருவர் கூறினார்.

தொட்டனைத் தூறும் மணற்கேணியாக அலர்மேலு மங்கைத் தாயாரின் பதிவுகள் அங்கும் இங்குமாகக் கிடைக்கின்றன. சுயநன்மையை வெறுத்துப் பொது நன்மையை நாடி பணியாற்றிய திராவிடப் போராளிகளின் முன்னோடியான அவரது வாழ்க்கைச் செய்திகளை முழுமையாக வெளிக்கொணர வேண்டியது நமது கடமையாகும்.

(வருவார்கள்...)

## ஒடிசாவில் பெருமை சேர்க்கும் தமிழர்



தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளி மாநிலங்களில் ஆட்சிப்பணி அதிகாரிகளாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு பாராட்டப்படுகின்றனர். அந்த வகையில் ஒடிசா மாநிலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரி வி.கே. பாண்டியன், அந்த மாநிலத்தில் அமைச்சர் அந்தஸ்தில் பணியாற்றத் தொடங்கியுள்ளார்.

ஐ.ஏ.எஸ் அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அவர் பிஜூ ஜனதா தளம் கட்சிக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் கூறி பாரதிய ஜனதா கட்சியினர் அவர் வீட்டின் மீது 2018 ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தினர்.

பிஜூ பட்நாயக்கின் தனிச்செயலாளராக இருந்த இவரின், விருப்ப ஓய்வுக்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்த நிலையில், ஓய்வுபெற்ற அடுத்த நாளே பட்நாயக் அமைச்சரவையில் அமைச்சர் அந்தஸ்தில் பொறுப்பேற்றுள்ளார்.

அரசின் திட்டங்களை ஒருங்கிணைக்கும் '5T' எனப்படும் துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே ஒடிசா மாநிலத்தில் பல்வேறு துறைகளின் தலைமைப் பொறுப்புகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்.பாலகிருஷ்ணன் செயல்பட்டுப் பெருமை சேர்த்தார். தற்போது வி.கே.பாண்டியனின் பணியும் சிறக்க வேண்டும். தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

## :ப்ளாஷ்பேக்





### கலைஞரின் ஆறுதல்!

1995 ஆம் ஆண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளார் மறைந்த பொழுது, மறுவாரத்தில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் குன்றக்குடிக்கு வருகை தந்து நமக்கு ஆறுதல் தெரிவித்ததுடன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் புகைப்படத்துக்கு மாலை அணிவித்தும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் சமாதியில் மலர் வளையம் வைத்தும் மரியாதை செலுத்தினார்கள்.

**-குன்றக்குடி ஆதீனம்,**
**தவத்திரு பொன்னம்பல அடிகளார் .**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஆளுநருக்கு எதிர்ப்பு

**1958 பிப்ரவரி 8 ஆம் தேதி, சட்ட மன்றத்தில் ஆளுநர் உரையைக் கழகம் புறக்கணித்தது. அதற்கு முன்பு அறிஞர் அண்ணா ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். "வடநாட்டைச் சேர்ந்தவர்களை இந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிப்பதற்கு எதிராக, இந்த நாட்டு மக்கள் தெரிவித்திருக்கும் உறுதியான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வடநாட்டவரையே ஆளுநராக நியமிக்கும் கொள்கையை ஆட்சேபிக்கும் வகையில் சட்டசபை கூடும் நாளில் ஆளுநர் உரையாற்றும்போது அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என்று தி.மு.கழக சட்டசபைக் கட்சி ஒருமனதாக முடிவு செய்கிறது" என அறிவித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 300




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131